

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | மார்ச் 05, 2015 | புரட்சி 14 | முழக்கம் 8 | விலை: ரூ.3.00

## பறி போகிறது எங்கள் நிலம் கொள்ளை போகிறது கனிம வளம் ஒழிகிறது வேலை வாய்ப்பு ஓங்கி வளருது ஜாதி வெறி

# ‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’

இளைஞர்கள், கல்வி வேலை வாய்ப்புகளை தனியார் மய கொள்கைகளால் பறித்து வரும் ஆட்சியாளர்கள், நாட்டின் கனிம வளத்தையும், விவசாய நிலங்களையும் சூறையாடிக் கொண்டு மதத்தையும், ஜாதி வெறியையும் திணிக்கிறார்கள். ஜாதி, மத வெறி சக்திகள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு சமூகத்தின் ஒற்றுமையையும் தமிழின ஓர்மையையும் சிதைக்கின்றன.

இந்த நிலையில் இளைஞர்கள், சுயமரியாதைக்கு தடையாக நிற்கும் ஜாதி வெறியையும் வாழ்வியலுக்கு தடையாக உள்ள அரசின் சுரண்டல் கொள்ளை களையும் எதிர்த்து நிற்க தயாராகி வருகிறார்கள். இந்த ஆபத்துகளை எடுத்துரைத்து, தமிழகம் முழுதும் பரப்புரை இயக்கங்களை நடத்த திராவிடர் விடுதலைக் கழகம் முடிவெடுத்துள்ளது.

28-02-2015 சனிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழு கூட்டம், சென்னை, மயிலாப்பூரில் உள்ள கழகத் தலைமை நிலையத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையிலும் நடை பெற்றது.

கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப் பட்டன.

1. “எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்“ என்ற முழக்கத்தை முன்வைத்து தமிழ்நாட்டின் ஆறு பகுதிகளில் - மார்ச்சு 20, 21, 22 ஆகிய நாள்களில் சென்னை, ஈரோடு, திருப்பூர், சேலம், நெல்லை, மயிலாடுதுறை ஆகிய இடங்களில் இருந்து புறப்பட்டு எட்டு நாள்கள் முதல் பத்து நாள்கள் வரையிலான பரப்புரை பயணங்கள் மேற் கொள்வது என முடிவெடுக்கப்பட்டது.

- பறிபோகிறது எங்கள் நிலம்! கொள்ளை போகிறது கனிம வளம்!
- ஒழிந்து போகிறது வேலை வாய்ப்பு! ஓங்கி வருகிறது ஜாதிவெறி!
- எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்!

- என்ற முழக்கத்தை முன் வைத்து மக்களிடையே பரப்புரை நடத்த முடிவு செய்யப்பட்டது.

2. கோவை, திருப்பூர், பொள்ளாச்சி, மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், தேனி மாவட்டத் தோழர்களுக்கு அடிப்படைப் பயிற்சி, அறிமுகப் பயிற்சி, பொறுப்பாளர் நிலை 1 ஆகிய வகுப்புகள் கடந்த 2013லேயே நடத்தப்பட்டுவிட்டது.

சேலம், மேற்கு, தர்மபுரி, கிருட்டிணகிரி, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, நாமக்கல் மாவட்டத் தோழர்களுக்கு பொறுப்பாளர் நிலை 1 நடத்தப்பட்டு விட்டது.

இவற்றின் தொடர்ச்சியாக பொறுப்பாளர் நிலை 2 வகுப்புகளை மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், தேனி மாவட்டத் தோழர்களுக்கு 2015, மே மாதம் 1, 2, 3 ஆகிய நாள்களிலும்

திருப்பூர், பொள்ளாச்சி, கோவை ஆகிய மாவட்டத் தோழர்களுக்கு 2015, மே, 4, 5, 6 ஆகிய நாள்களிலும்

**தமிழகம் தழுவிய பரப்புரை இயக்கம் பிப். 20இல் கழகம் தொடங்குகிறது!**

இரண்டு பயிற்சிகளும் கொடைக்கானலில் நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

3. தலைமைக்குழு உறுப்பினர்கள் ஈரோடு இரத்தின சாமி, திருப்பூர் துரைசாமி, தூத்துக்குடி பால் பிரபாகரன் ஆகியோரைக் கொண்ட குழுவினர் பெரியார் முழக்க உறுப்பினர் சேர்க்கையை நிறைவு செய்து, மார்ச்சு 15-க்குள் நேரில் சென்று கணக்குகளை முடித்துப் பெறுவதென முடிவெடுக்கப்பட்டது.

4. கழகத்தின் வெளியீடுகளை newshunt இணையக் குழுவினர் வழியாக கைபேசியில் படிக்கும் வகையில் வெளியிடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் பொறுப்பை தோழர் விசயகுமார் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

## சோதிட மாநாட்டில் அரசு அதிகாரிகளா?

# மாநாட்டு அரங்க வாயிலில் கழகம் போர்க்கொடி: கைது




தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மய்யமும் மலாய் பல் கலைக்கழக இந்திய ஆய் வியல் துறையும் இணைந்து, சோதிட மூடத்தனத்தைப் பரப்பும் மாநாட்டை அனைத் துலக மாநாடாக சென்னை யில் நடத்தியது. இம் மா நாட்டுக்கு தமிழ்நாடு மற்றும் அயல் நாடுகளிலிருந்து சோதிடர்கள் வந்திருந் தார்கள். தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மய்யத்தின் நிறுவனர் முனைவர் தி. மகாலட்சுமி, மலாய் பல்கலைக்கழக பேரா சிரியர் கோவி. சிவராமன் ஆகியோர் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்த இந்த மாநாடு மார்ச் முதல் தேதி சென்னை குருநானக் கல்லூரில் நடந்தது.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் கா.மு. சேகர் தலைமையில் நடந்த இந்த மாநாட்டில், சோதிடர் மாடசாமி, உதவி பேராசிரியர் கை. சங்கர் , முன்னாள் மாவட்ட நீதிபதி கோ.சு. ஆறுமுகம், எச். வசந்த் குமார் (வசந்த் தொலைக் காட்சி குழுமம்), முனைவர் அய்யம் பெருமாள் (தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மய்ய செயல் இயக்குனர்), திரைப்பட நடிகர் ராஜேஷ், மருத்துவர் இராமசாமிப் பிள்ளை உரையாற்றுவதாகவும், காவல் துறை அதிகாரி முனைவர் கு.பெரியய்யா, அய்.பி.எஸ். சிறப்புரை யாற்றுவதாகவும் அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்தது. பெரியய்யா, காவல்துறை பயிற்சிக் கல்லூரி முதல்வராக உள்ளார்.

காலையில் நடந்த தொடக்க விழாவுக்கு தலைமை தாங்கியவர் உலகத் தமிழர் ஆராய்ச்சி இயக்குனர் முனைவர் கோ. விஜயராகவன். உரையாற்றிவோரில் இடம் பெற்றிருந்த சோதிடர்களின் பெயர்களோடு, முன்னாள் துணைவேந்தர் பொன்னவைக்கோ, வி.ஜி.பி. சந்தோஷம், குருநானக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் முனைவர் செல்வராசன் ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர். சோதிடப் பயன்களும் 46 சோதிடர்களின் பெயர் பட்டியலும் வெளியிடப்பட்டு சோதிட மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

(4 ஆம் பக்கம்)

# பொது சிவில் சட்டம்: சில வரலாற்றுத் தகவல்கள்

*அனைத்து மதத்தினருக்கும் பொதுவான சிவில் சட்டம் தேவை என்று சங்பரிவாரங்கள் மீண்டும் பேசத் தொடங்கியுள்ளன. பொது சிவில் சட்டம் குறித்த சில வரலாற்றுத் தகவல்கள்: (19.2.2015 இதழ் தொடர்ச்சி)*

சுதந்திரம் பெற்றபின் அம்பேத்கர் தலைமையில் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் பொது சிவில் சட்டம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. தொடக்கத்தில் அரசியல் சட்டம் வழிகாட்டும் கோட்பாடு எண்.37 ஆக இடம் பெற்றிருந்த பொது சிவில் சட்டம், அரசியல் நிர்ணய சட்டம் நிறைவேறியபின் கோட்பாடு எண்.44 ஆக இடம் பெற்றது. அதன்படி குடிமக்கள் அனைவரும் ஒரே சீரான உரிமையியல் சட்டத்தை இந்தியா முழுவதிலும் அமுல் செய்யப்படுவதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும். இதனால் தாங்கள் பின்பற்றும் ஷரியத் சட்டம் ஆபத்துக்குள்ளாகுமோ என்ற அச்சத்தில் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களான முகமது இஸ்மாயில் சாகேப், நசிருத்தீன் அகமது, மகபூப் அலி பெய்க் மற்றும் பாக்கர் சாகேப் பகதூர் போன்றவர்கள் திருத்தங்கள் கொண்டு வந்து, தங்கள் தனிநபர் சட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென கோரினர். அதற்கு அவர்கள் யூகோஸ்லாவியா, செர்பிய, குரேஷியா மற்றும் ஸ்லோவினிய நாடுகளில் சிறுபான்மை இனத்தவருக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பை சுட்டிக்காட்டி, அதே போன்றதொரு பாதுகாப்பை இங்கேயும் கோரினர். இது குறித்து கருத்து தெரிவித்த அம்பேத்கர். மதத்திற்கு தனிநபர் வாழ்க்கையில் இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதையும், சட்டமியற்றுவதற்குகூட மதம் குறுக்கிடும் போக்கையும் புரிந்து கொள்ள முடியவில்லையென்ற அவர், ஏற்றத் தாழ்வும், பாரபட்சமும், மற்ற பிற்போக்கு நிலையும் உள்ள சமூகத்தை சீர்திருத்தும் முயற்சிக்கு உரிமை என்ற பெயரால் எதிர்ப்பு தெரிவிப்பதை ஏற்க இயலாது என்று கூறினார். எனினும் ஒரு பொது சிவில் சட்டம் இயற்ற அரசுகள் முற்படும்போது குறிப்பாக முசுலீம் சமூகத்தினரின் கருத்தொற்றுமையுடன் செயல்படவில்லையென்றால் குழப்பமே ஏற்படும் என்பதையும் கூறி எச்சரித்தார். அரசியல் சட்டத்தின் மூன்றாம் பாகமான அடிப்படை உரிமைகள் என்ற தலைப்பில் இடம் பெற்றிருக்க வேண்டிய இந்த கோட்பாடு, துணைக் குழுவில் ஒரு ஓட்டு வித்தியாசத்தில் தோற்றுப் போனதால் வழிகாட்டும் நெறிமுறைகள் என்ற நான்காம் பாகத்தில் இடம் பெற்றது. வழிகாட்டும் நெறிமுறையில் உள்ள கோட்பாடுகள் 37 முதல் 51 வரை பெரும்பாலும் இன்றுவரை அமுல்படுத்தப்படாமல் உள்ளன.

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான நேரு, நாடு முழுவதும் இந்துக்களுக்கு ஒரு பொதுவான சிவில் சட்டத்தைக் கொண்டுவர இந்து தனிநபர் சட்டங்களை தொகுக்க அம்பேத்கர் தலைமையில் ஒரு குழு அமைத்தார். பெண்களுக்கு சம உரிமை, சொத்துரிமை, விவாகரத்து உரிமை வழங்க வேண்டுமென்பதில் அம்பேத்கருடன் நேருவும் ஒத்த கருத்து கொண்டிருந்தார். அத்தகைய கருத்துகளையொட்டி அம்பேத்கர் முயன்று உருவாக்கிய மசோதா இந்து பழமைவாதிகளிடமும், இந்து மகா சபையினரிடமும் (இன்றைய பிஜேபியின் முன்னோடி) கடுமையான கண்டனத்தை சந்தித்தது. அன்றைய குடியரசுத் தலைவராக இருந்த இராஜேந்திர பிரசாத் இந்த மசோதா இந்து பாரம்பரியத்துக்கு எதிரானது என்றும், ஒவ்வொரு இந்து குடும்பத்தையும் பாதிக்கும் என்று கூறியதோடு, மசோதா நிறைவேறினாலும் சட்ட அங்கீகாரம் பெற தன்னுடைய கையெழுத்து கிடைக்காது என்பதையும் உணர்த்திவிட்டார். பெண்களைத் தவிர பெரும்பாலான காங்கிரஸ் உறுப்பினர்களும், எதிர்ப்பாக இருந்தனர். எனவே எவ்வித விளக்கமுமின்றி மசோதா கைவிடப் பட்டது. இதை எதிர்த்து சட்ட அமைச்சராக இருந்த அம்பேத்கர், தன் பதவியை ராஜினாமா செய்தார். மசோதாவை எதிர்க்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் தலைமைக் கொறடா உத்தரவு பிறப்பித்தார். அதை ஏற்றுக் கொண்டார். நேரு, விசுவாசமில்லாத தலைமைக் கொறடாவுக்கு விசுவாசமான பிரதமர் என காட்டமாக அம்பேத்கர் விமர்சித்தார். 1952இல் நடைபெற்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று மீண்டும் பிரதமரான நேரு, இந்து தனி நபர் சட்டங்களில் தேவையான மாற்றங்களுடன் சட்டங்களை கொண்டு வந்தார். 1954இல் கொண்டுவரப்பட்ட சிறப்பு திருமண சட்டத்தின் அடிப்படையில் எவரும் திருமணத்தை பதிவு செய்யலாம். அதன் மூலம் அவரவர் மதம் சார்ந்த தனிநபர் சட்டம் அனுமதிக்கவில்லையென்றாலும் வாரிசுரிமை, மரபுரிமை போன்றவற்றை பெற வழி செய்யப்பட்டது. எனினும், இந்த சட்டப்படி பதிவு செய்வதை முசுலீம் மத குருமார்கள் பாவம் என்று கூறி எதிர்த்தனர். அதன் பின் இந்து திருமண சட்டம் 1955இல் கொண்டு வரப்பட்ட, பலதார மணம் தடை செய்யப்பட்டது. தத்தெடுத்தவர் பிள்ளையின் தாயாரை, தத்தெடுப்பவர் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்பதை தடுக்கும் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம் ஆகியவை 1956ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டன. முசுலீம், சீக்கியர்கள், பார்சிகள் மற்றும் கிருத்துவர்கள் தவிர ஏனைய அனைவரும் இந்து என்றே வகைப்படுத்தப்பட்டனர். இறைவன் தந்த குரானும், நபிகள் நாயகம் கூறிய வார்த்தைகளுமே ஷரியத் சட்டத்தின் அடிப்படை என்பதால், ஒவ்வொரு முசுலீமும் அதனை கடைபிடிப்பது கட்டாயம் என்று முசுலீம் சமூகம் கருதியதால் முசுலீம் தனிநபர் சட்டத்தில் அரசு குறுக்கீடு ஏதும் செய்யவில்லை. அதேபோன்று சீக்கியர்களுக்கு கிரந்தசாகிபும், கிருத்துவர்களுக்கு பைபிளும், பார்சிகளுக்கு ஜெண்ட் அவெஸ்தாவுமே தனிநபர் சட்டங்களுக்கு அடிப்படையாக இருந்தன. மத சட்டங்கள் அனைத்துமே பெண்களை கீழ்நிலையிலேயே வைத்துள்ளன. பெண்கள் அமைப்புகளும், ஜனநாயக அமைப்புகளும் கோரும் பாலின சமத்துவத்தை ஏற்பதில்லை. மத அடிப்படைவாதிகளின் பேச்சும் செயலும் பாலின சமத்துவத்திற்கு எதிராகவே உள்ளன. பாலின சமத்துவத்தையும், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதையும் பெண்களுக்கு உறுதிப்படுத்தாமல் ஒரு பொது சிவில் சட்டத்தை நோக்கிப் போக முடியாது.

## நெருக்கடி தந்த நீதிமன்ற தீர்ப்புகள்

1985க்குப் பிறகு வந்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளில் பொது சிவில் சட்டம் கொண்டு வருவதன் தேவையை மத்திய அரசுக்கு அறிவுறுத்தியது. ஷரியத் சட்டத்தையொட்டி இந்த தீர்ப்புகள் வழங்கப்பட்டதால் முசுலீம் சமூகம் நெருக்கடிக்கு ஆளானது. பிரசித்தி பெற்ற ஷாபானு வழக்கு விவாகரத்து பெற்ற முசுலீம் பெண்கள் ஜீவனாம்சம் குறித்ததாகும். 73 வயதான ஷாபானு திருமணமாகி 40 வருடங்கள் கழித்து, ஷரியத் சட்டப்படி மும்முறை தலாக் சொல்லப்பட்டு விவாகரத்தானவர். அவருக்கு சட்டப்படி இத்தா காலமான மூன்று மாதத்திற்கு மட்டும் ஜீவனாம்சம் தரப்பட்டது. தனது எஞ்சிய ஆயுட்காலத்திற்கு வேறு ஆதரவில்லையென்பதால் குற்றவியல் சட்டம் பிரிவு 125இன்படி தனக்கு ஜீவனாம்சம் வழங்க நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். உச்சநீதிமன்றம் அவரது வாதத்தை ஏற்றுக் கொண்டு ஜீவனாம்சத்தை அவரது முன்னாள் கணவர் தர வேண்டுமென தீர்ப்பு தந்தது. ஷரியத் சட்டத்துக்கு எதிரானது என்று கூறி, முசுலீம் சமூகம் நாடு முழுவதும் கடுங்கண்டனத்தையும், போராட்டத்தையும் நடத்தியது. எனவே பிரதமராகவிருந்த ராஜீவ் காந்தி முசுலீம் சமூகத்தை திருப்திப்படுத்தும் வகையில் 1986இல் முசுலீம் பெண்கள் (விவகாரத்து பாதுகாப்பு) சட்டம் என்ற ஒன்றைக் கொண்டு வந்தார். இதன்படி விவாகரத்தான முசுலீம் பெண்ணுக்கு அவருடைய சொத்தை யார் அடைவதற்கு உரிமை பெற்றிருக்கிறார்களோ அவர்கள் தரவேண்டும் அல்லது சொத்து ஏதுமின்றி ஆதரவற்று இருந்தால் வக்ப் போர்டு பராமரிப்புக்கான தொகையை வழங்க வேண்டும். இதன் மூலம் இத்தா காலத்திற்குப் பிறகு ஜீவானாம்சம் தரும் பொறுப்பிலிருந்து கணவர் விடுவிக்கப்பட்டதோடு ஷரியத் சட்ட அம்சமும் பாதுகாக்கப்பட்டது. எனினும் ஷாபானு வழக்கு தொடர்பான தீர்ப்பில் பாலின சமத்துவத்தை வலியுறுத்திய அம்சம் கணக்கில் கொள்ளப்படவில்லை. எனவே சட்டத்தின் முன் பாலின வித்தியாசமின்றி அனைவரும் சமம் என்ற கோட்பாடு மீறப்பட்டுள்ளதாக விமர்சனமும் எழுந்தது. இந்தப் பிரச்சினையில் ஒரு இந்துப் பெண்ணுக்கு கிடைக்கும் சலுகை முசுலீம் பெண்ணுக்கு மறுக்கப்படுவதாக பெண்களின் அமைப்புகள் எதிர்ப்பை முழங்கின.

அதேபோன்று 1995இல் சரளா முட்கல் எதிர் இந்திய ஒன்றியம் வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதி சகாய் இரண்டாம் திருமணம் செய்ய வேண்டுமென்பதற்காக முசுலீமாக மதம் மாறி திருமணம் செய்வது குற்றவியல் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று தீர்ப்பு வழங்கினார். இந்து திருமண சட்டம் ஒருதார மணத்தை வலியுறுத்துவதால் இரண்டாவது திருமணம் செய்து கொள்ள மதம் மாறுவதைத் தடுக்க வேண்டுமானால், ஒரு பொது சிவில் சட்டம் மத்திய அரசு நிறைவேற்றுவது அவசியம் என்று தீர்ப்பில் குறிப்பிட்டார். வேறு சில தீர்ப்புகளும் இதே காலத்தில் ஷரியத் சட்டத்திற்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் வந்தன. வலதுசாரி இந்து பழமைவாதிகளுக்கு பொது சிவில் சட்டம் கொண்டு வரவேண்டுமென்ற அவர்களின் வாதத்துக்கு இந்த தீர்ப்புகள் வலுசேர்த்தது. மேலும் பெண்கள் அமைப்புகளும், முற்போக்கு எண்ணம் கொண்டவர்களும் டூனிசீயா, துருக்கி போன்ற முசுலீம் நாடுகளில் பலதார மணத்திற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதையும், பாகிஸ்தான், சிங்கப்பூர், சவுத் யேமன் போன்ற நாடுகளில் ஷரியத் சட்டத்தில் மாற்றம் கொண்டு வந்திருப்பதையும் சுட்டிக்காட்டி ஷரியத் சட்டத்தில் தகுந்த மாற்றங்கள் கொண்டுவர முசுலீம் சமூகத்தினரை வற்புறுத்தினர். இந்து பழமைவாதிகளும் சங்பரிவாரங்களும் பாரம்பரியமிக்க இந்து தனிநபர் சட்டத்தின் அடிப்படையிலேயே பொது சிவில் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தியது. முசுலீம்கள் மத்தியில் ஒரு பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தியது. பாபர் மசூதி இடிப்பும், அது தொடர்பான வழக்கில் இதுவரை யாரும் தண்டிக்கப்படாமல் இருப்பதும், மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோயில் கட்டுவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ள நிலையும், அவர்களை ஒரு பலவீனமான நிலைக்குத் தள்ளியுள்ளது. இருக்கும் தனிநபர் சட்டங்களிலேயே தங்கள் தனிநபர் சட்டம் மேலானது, உயர்வானது, பெண்களுக்கு கூடுதல் உரிமை தருகிறது என்று முஸ்லீம்கள் வாதாகிறார்கள். இதை மாற்றும் பொறுப்பு அரசிடமே உள்ளது. ஒரு பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருவதில் அம்பேத்கர் நிதானம் காட்டினாலும் உறுதியுடன் இருந்தார். வேண்டுமானால் பொது சிவில் சட்டத்தை ஏற்றுக் கொள்வதாக அறிவிப்பு செய்கிறவர்களுக்கு மட்டுமே அனுமதிக்கலாம் என்றும் கூறினார். கோவாவில் அத்தகைய நிலை இருக்கிறது. போர்த்துக்கீசிய குடும்ப சட்டம் தொடர்ந்து நீடிக்க வேண்டமென்ற ஒப்பந்த அடிப்படையிலேதான் 1961இல் கோவா மாநிலம் விடுதலை பெற்றது. பின்னர் பொதுவான தனிநபர் சட்டத்தை கோவா அரசு கொண்டு வந்தாலும், அதை ஏற்பதாக அறிவிப்பவருக்கு மட்டுமே அமுலாகும் என்பதும் சேர்க்கப்பட்டது.

பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை அந்தந்த சமூகத்திலிருந்து பெண்களே எதிர்க்க முன் வரவேண்டும். அதுவே ஒரு பொது சிவில் சட்டத்தை நோக்கி எடுத்து வைக்கும் முதல் அடியாக இருக்கும். குரங்கு குட்டியை விட்டு ஆழம் பார்ப்பதுபோல் ஆர்.எஸ்.எஸ். தனது பரிவாரங்கள் மூலம் பொது சிவில் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று எழுப்பும் குரல் உள்நோக்கமுடையது. படிப்படியாக அனைத்து மதத்தினரின் மனமாற்றத்துடன் கொண்டு வர வேண்டிய பொது சிவில் சட்டத்தை இந்துமத அடிப்படையில் கொண்டுவர வேகம் காட்டினால், தேசம் மற்றும் மக்களின் ஒற்றுமையை உடைக்கும் கலவரத்தின் விதையாகவே அது இருக்கும்!

**ஆதாரம்: இணையதளங்கள் மற்றும் மார்க்சிஸ்ட் மாத இதழ்**


"புரட்சிப் பெரியார் முழக்கம்"

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.200**

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

# நீதிபதிகள் நியமனத்தில் சமூக நீதியைப் பறிக்காதே

# கழக சார்பில் எழுச்சி ஆர்ப்பாட்டம்



சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனங்களில் சமூக நீதியை வற்புறுத்தி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 25..2.2015 மாலை 4 மணியளவில் வள்ளுவர் கோட்டம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் வழக்கறிஞர்கள் துரை. அருண், திருமூர்த்தி முன்னிலையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் ஆர்.சி. பால். கனகராஜ், முற்போக்கு வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் எஸ். ரஜினிகாந்த், சமூக நீதிப் பேரவைத் தலைவர் கே.பாலு, ஜனநாயகம் மற்றும் சமூக நலன்களுக்கான வழக்கறிஞர் பேரவையைச் சார்ந்த செ. விஜயகுமார், அகில இந்திய எல்.அய்.சி. பிற்படுத்தப்பட்டோர் நலச் சங்க செயலாளர் கு. கமலக்கண்ணன், சிறுபான்மையினர் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் ஜைனூல் ஆபீதீன், பெண்கள் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் வா. நளினி, வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் அறிவழகன், துணைத் தலைவர் கினி லீயோ மேனுவேல், சி.பி.அய்.எம்.எல். மக்கள் விடுதலை சார்பில் செல்வி, மனித நேய மக்கள் கட்சி அமைப்புச் செயலாளர் மொய்தின் உலவி, வருமான வரித் துறை பிற்படுத்தப்பட்டோர் நலச் சங்க பொதுச் செயலாளர் கி. குமார், இளந்தமிழர் இயக்கம் சார்பில் செந்தில், வழக்கறிஞர் திருமூர்த்தி ஆகியோர் உரையாற்றினர். வழக்கறிஞர் துரை. அருண் தொகுத்து வழங்கினார். மாவட்ட தலைவர் ஜான் மண்டேலா, செயலாளர் உமாபதி, அன்பு தனசேகரன், அய்யனார், ஏசு உள்ளிட்ட மாவட்டக் கழகத் தோழர்கள் ஏராளமாக பங்கேற்றனர். 3.30 மணிக்கு தொடங்கிய ஆர்ப்பாபட்டம் 7 மணி வரை தொடர்ந்தது.

தற்போது உயர்நீதிமன்றத்தில் 18 பதவிகள் காலியாக உள்ளன. ஏற்கனவே தலைமை நீதிபதி, இரண்டாவது நிலையில் உள்ள நீதிபதி உள்பட 7 பார்ப்பன நீதிபதிகள் உள்ளனர். இப்போது புதிதாக பரிந்துரைக்கப்பட்ட பட்டியலிலும், பார்ப்பனர்களுக்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அதுவும் 50 வயதுக்குட்பட்டவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். இதனால் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவியை எட்டுவதற்கான கால வாய்ப்பை உருவாக்கித் தருகிறார்கள். அதே நேரத்தில், பிற சமூகத்தைச் சார்ந்தவர்களைத் தேர்வு செய்யும் போது 50 வயதுக்கும் மேற்பட்டவர்களாக தேர்வு செய்கிறார்கள். ஒரே பட்டியலாக அனுப்பினால் பார்ப்பனர்கள் இடம் பெறுவது பளிச்சென்று அம்பலமாகிவிடும் என்பதால், இரண்டு பட்டியலாக அனுப்பும் தந்திரமான முடிவை தலைமை நீதிபதி மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் இதுவரை பழங்குடி சமூகத்தைச் சார்ந்த எவரும் நீதிபதியாக வந்தது இல்லை. அருந்ததியர், மீனவர், யாதவர், பொற்கொல்லர், குயவர், வண்ணார், நாவிதர், பழங்குடியினர், முத்தரையர், சிறுபான்மையினர் போன்ற எத்தனையோ சமூகப் பிரிவினர் நீதிபதிகளாக வந்ததில்லை. பெண்களுக்கான பிரதிநிதித்துவம் இல்லை. இந்த நிலையில், முதல் பட்டியலை தலைமை நீதிபதி அனுப்பி வைத்துள்ளார். இந்தப் பட்டியலை ஏற்கக் கூடாது என்று வழக்கறிஞர் சங்கப் பிரதிநிதிகள் டெல்லியில் சட்ட அமைச்சரவை சந்தித்து நேரில் வற்புறுத்தியுள்ளனர். காஷ்மீர் பார்ப்பனரான தலைமை நீதிபதி, தான் தயாரித்த முதல் பட்டியல் 'தகுதி' அடிப்படையிலானது என்றும் இரண்டாவது பட்டியல் 'இடஒதுக்கீடு அடிப்படையிலானது' என்றம் கூறும் சமாதானம் திறமை வாய்ந்த ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வரும் வழக்கறிஞர்களை அவமதிப்பதாகும் என்று கண்டனக் கூட்டத்தில் பேசியவர்கள் சுட்டிக் காட்டினர். நீதிபதி நியமனங்களில் இதுவரை பிரதிநிதித்துவம் கிடைக்காத சமூகத்தினருக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும் என்று ஏற்கனவே உச்சநீதிமன்றம் (ஆர். காந்தி - எதிர் இந்திய அரசு வழக்கில்) எடுத்துக் கூறி அனைத்து உயர்நீதிமன்றங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது. பார்ப்பன தலைமை நீதிபதிக்கு எதிராக வெளிப்படையாக வழக்கறிஞர்கள் சங்கம் போர்க்கொடி உயர்த்திருப்பது - பெரியார் ஊட்டிய உணர்வுகளுக்கு கிடைத்த வெற்றி!

## வினாக்கள்... விடைகள்...!

- அன்னை தெரசா – சமூகத் தொண்டுக்கு காரணம் மதம் மாற்றம் செய்வதுதான்.
  – **ஆர்.எஸ்.எஸ்.தலைவர்மோகன் பகவத்**

  அவராவது மதம் மாற்றுவதற்காகவாவது சமூகத் தொண்டு செய்தார்; நீங்கள் செய்யும் ஒரே சமூகத் தொண்டு மதம் மாற்றுவது மட்டும்தான்!

- அஷ்டலட்சுமி கோயில் அர்ச்சகர் கராத்தேயில் 'பிளாக் பெல்ட்' வாங்கியவர். – **செய்தி**

  அதுக்காக 'கிராஸ் பெல்ட்டை' கழற்றி வீசிடவாப் போறாரு?

- இந்தியாதான் எனது மதம். – **மோடி**

  அப்படியா! இதைப்போய் ஒரு நாடுன்னு நினைச்சு நாங்க முட்டாள்தனமா நினைச்சுகிட்டே இத்தனை காலமா, ஏமாந்துட்டோங்க....

- இராஜபக்சேயின் ஆஸ்தான சோதிடர் கமனதாசா, தேர்தல் முடிவுக்குப் பிறகு தலைமறைவாகிவிட்டார். – **செய்தி**

  குருநானக் கல்லூரியில் நடந்த மாநாட்டுக்கு வந்தாலும் வந்திருப்பார்; நல்லா தேடிப் பாருங்க!

- ராகுல் காங்கிரசிலிருந்து விடுமுறை எடுத்துள்ளார். – **செய்தி**

  காங்கிரசே நீண்ட விடுமுறையில தானே இருக்கு? இவருக்கு மட்டும் எப்படி விடுமுறை கிடைச்சுது?

- தமிழ்நாட்டில் கவுரவக் கொலைகளே நடக்கவில்லை. – **முதல்வர் பன்னீர்செல்வம்**

  இப்படி எல்லாம் பேசாதீங்க சார்; அப்புறம் மிச்சமிருக்கும் உங்க கவுரவமும் குறைஞ்சுடப் போவுது!

- கரூர் கோயிலில் ஜெயலலிதா பிறந்த நாள் யாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் பங்கேற்பு.
  – **செய்தி**

  அரசு அதிகாரிகள் மத நிகழ்ச்சிகளில் பங்கேற்கக் கூடாதுன்னு தலைமைச் செயலாளர் போட்ட உத்தரவு என்னாச்சு? இந்த உத்தரவை நடைமுறைப்படுத்த, அரசு சார்பில் ஒரு யாகம் நடத்துவீங்க போலிருக்கு!

# வங்கிகள்—கார்ப்பரேட் கூட்டுக் கொள்ளை

அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களில் பெரும்பாலோர் தகுதி திறமைக்கு உரிமை கொண்டாடும் பார்ப்பனர் மற்றும் உயர்ஜாதியினராக இருப்பார்கள். ரிசர்வ் வங்கி ஆளுநராக இருப்பவரும் ஒரு பார்ப்பனர்தான். ஏழை எளிய மக்கள், வங்கியில் கடன் வாங்குவது அவ்வளவு எளிதல்ல. ஆனால், தொழில் நிறுவனங்களுக்கு பெரும் தொகையை வாரி வழங்குவதும், பிறகு அதை திரும்பி வராத கடன் என்று தள்ளுபடி செய்வதும் - எந்தத் தடையும் இல்லாமல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதுபற்றி இப்போது அதிர்ச்சியான தகவல்கள் வந்துள்ளன. 2008 மார்ச் நிலவரப்படி ரூ.455 கோடியாக இருந்த திரும்பி வராத கடன் தொகை, 2014இல் ரூ. 2.17 இலட்சம் கோடியாக அதிகரித்திருக்கிறது. 6 ஆண்டுகளில் 'திரும்பி வராத' கடன் தொகை 500 மடங்கு அதிகரித்துள்ளது. இது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேதண்திரோட்கர் என்ற ஓய்வு பெற்ற பத்திரிகையாளர் ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்ற தகவல். பெரும் தொழில் நிறுவனங்கள், அரசியல்புள்ளிகள், கார்ப்பரேட் நிறுவனங்கள் என்று முறைகேடான வழிகளில் ரிசர்வ் வங்கி ஒப்புதலுடன் வங்கிகள் நடத்தியுள்ள முறைகேடுகளே இதற்குக் காரணம். இது குறித்து சி.பி.அய். விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அந்த பத்திரிகையாளர் மும்பை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மனுதாரர் மனுவில் பல்வேறு முறைகேடுகளை சுட்டிக்காட்டியுள்ளார். 1969ஆம் ஆண்டு வங்கிகள் முறைப்படுத்தும் சட்டத்தின் கீழ் பொதுத் துறை வங்கிகள் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் தமது தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை ரிசர்வ் வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த விதியை பொதுத் துறை வங்கிகள் பின்பற்றுவது இல்லை. ரிசர்வ் வங்கியும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த வங்கிகள் பெரும் தொகையை யார் யாருக்கு கடனாக வழங்கியது என்பதை கண்காணிக்கவும் இல்லை. ரிசர்வ் வங்கி அதிகாரிகளும், பொதுத் துறை வங்கி அதிகாரிகளும் கூட்டு சேர்ந்து நடத்தியுள்ள சதி என்று கேதண்திரோட்கர் மனுவில் குறிப்பிட்டுள்ளார். 'திருப்பித் தர வேண்டாம்' என்ற நிபந்தனையோடு உரிய பங்குத் தொகையை பேரம் பேசிக் கொண்டு பெரும் தொழிலதிபர்களுக்கு வங்கி அதிகாரிகள் வழங்கும் இந்த கடன் தொகையை சரிகட்ட சில தில்லுமுல்லுகள் அரங்கேற்றப்படுகின்றன. பெயரளவுக்கு மிகக் குறைவான ஒரு தொகையை வசூலித்துக் கொண்டு, அதற்கு 'ஒரே முறையில் தீர்வு' என்று பெயர் சூட்டிக் கொள்கிறார்கள். இப்படி 'ஒரே முறையில் தீர்வு' திட்டத்தின்கீழ் திரும்பப் பெறும் 'சிறு தொகையை'க் கணக்கில் காட்டி, வாராக் கடன்களை திரும்ப வசூலித்துவிட்டதாக ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பதிவு செய்து விடுகிறார்கள்.

விஜய் மல்லையாவின் கிங் ஃபிஷர் நிறுவனம் உள்ளிட்ட 406 நிறுவனங்கள் வங்கிகளுக்கு திருப்பி செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.70,300 கோடி. வாராக் கடன்கள் குறித்து சி.பி.அய். வழக்குகள் பதிவு செய்தாலும், வங்கிகளின் உயர் அதிகாரிகளிடம் இது குறித்து விசாரணை நடத்த முடிவதில்லை. காரணம், இதற்கு மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும். மத்திய அரசோ, இதற்கு அனுமதி வழங்குவது இல்லை. உதாரணமாக

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 05.03.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# சென்னையில் மார்ச் 20இல் பரப்புரை இயக்கம் தொடங்குகிறது

“எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்” என்ற தலைப்பில், ஆறு பகுதிகளில் பரப்புரை இயக்கங்கள் நடத்துவது என்று எடுத்த முடிவின்படி சென்னை மண்டலத்தில் பரப்புரை இயக்கம் மார்ச் 20ஆம் தேதி தொடங்குகிறது.

20.3.2015, வெள்ளி மாலை 6 மணி, பெரவள்ளூர் சதுக்கத்தில், ந. பாஸ்கர் தலைமையில், தட்சிணாமூர்த்தி வரவேற்பு முன்னிலை : ஏசுகுமார், அருள்தாசு, முனுசாமி, நாகேந்திரன் துரை, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

பயணம் - மார்ச் 21இல் பொன்னேரியில் தொடங்கி, மார்ச் 31இல் காஞ்சியில் நிறைவடைகிறது. பயணத்தின் முழு விவரம் அடுத்த இதழில்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

‘பயோதார் இன்டஸ்ட்ரீஸ்’ என்ற உயிரி எரி பொருள்களை (பயோ டீசல்) தயாரிக்கும் நிறுவனம் அய்.டி.பி.அய். வங்கியிடம் ரூ.1100 கோடி கடன் வாங்கியது. அது ‘திரும்பி வராத கடனாக’ வங்கி நிர்வாகம் அறிவித்து ஏமாற்றியுள்ளது. இது தொடர்பாக வழக்கு 2011இல் சி.பி.அய். வழக்குப் பதிவு செய்தது. ஆனால், அய்.டி.பி.அய். வங்கியின் உயர் அதிகாரியை சி.பி.அய். விசாரிப்பதற்கு அரசு அனுமதி கிடைக்கவில்லை. இதேபோல் ‘மாகுவா மீடியா’ என்ற தொலைக்காட்சி நிறுவனத்துக்கு பஞ்சாப் நேஷனல் வங்கி கொடுத்த ரூ.2700 கோடியை ‘திரும்பி வாராத கடனாக’ அறிவிக்கப்பட்டுவிட்டது. இது தொடர்பாக அந்த வங்கி உயர் அதிகாரியை சி.பி.அய். விசாரிக்க, கடந்த காங்கிரஸ் ஆட்சியும் மோடி ஆட்சியும் அனுமதி வழங்கவில்லை. பார்ப்பன-பனியா கூட்டுக் கொள்ளைக்கு இவை சில சான்றுகள் மட்டுமே.

# திருச்சியில் கழகம் நடத்தும் மகளிர் நாள்

மார்ச் 8 - உலக மகளிர் நாளை முன்னிட்டு அன்னை மணியம்மையார் பிறந்த நாளான மார்ச் 10ஆம் தேதி திராவிடர் விடுதலைக் கழகம், ‘பெண்ணுரிமை கருத்தரங்கம்’ ஒன்றை ரவிமணி ஹாலில் (சத்திரம் பேருந்து நிலையம்), மாலை 4.30 மணியளவில் நடத்துகிறது. தோழர் மனோகரன் தலைமையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பேராசிரியர் சரசுவதி, வே. மதிமாறன் உரையாற்றுகிறார்கள்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இப்படி ஒரு மாநாடு நடக்க இருக்கும் சேதியை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திராவிடர் விடுதலைக் கழக தலைமைக் குழு கூட்டம் நடந்த பிப். 28ஆம் தேதி தெரிவித்தார். உடனே சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடிவு செய்தனர். விஞ்ஞான மனப் பான்மையை குடிமக்களிடம் பரப்ப வேண்டும் என்று அரசியல் சட்டம், குடி மக்களின் கடமையாக வலியுறுத்து கிறது. இதற்கு நேர்மாறாக அறிவியல் என்று ஏற்கப்படாத மூடநம்பிக்கை யான சோதிடத்தைப் பரப்ப ஒரு மாநாடு நடத்து வதும், அதில் அரசுத் துறையில் பணி யாற்றும் அதிகாரிகளே பங்கேற்பதும் சட்ட விரோதமானதாகும். எனவே சேதி கிடைத்த அடுத்த நாளே கழகம் களமிறங்கியது.

திட்டமிட்டபடி திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள், மார்ச் முதல் தேதி காலை 10 மணி யளவில் மாநாடு நடைபெறும் வேளச்சேரியில் உள்ள குருநானக் கல்லூரி வாயிலில், கழகக் கொடியுடன் திரண்டனர். சோதிடத்தை அறிவிய லாக்காதே; சோதிட மாநாட்டில் பங்கேற்கும் அரசு ஊழியர்களை பணி நீக்கம் செய்; தமிழக அரசே – சோதிட மூடநம்பிக்கை பரப்புவதற்கு துணை போகாதே என்ற முழக்கங்கள் அடங்கிய அட்டைகளை கரங்களில் ஏந்திக் கொண்டு முழக்கமிட்டு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மாவட்ட செயலாளர் உமாபதி தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் ஜான். மாண்டேலா, அன்பு தனசேகரன், வழக்கறிஞர் துரை. அருண், ஏசு. குமார், அருள்தாசு, தட்சிணா மூர்த்தி, மாரி, இராவணன், பாரி, குகா, முழக்கம் உமாபதி, மனோகர், நாத்திகன், விழுப்புரம் அய்யனார் உள்ளிட்ட 35 தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காவல்துறை குவிக்கப்பட்டிருந்தது. 30 நிமிடம் வரை கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. பின்னர், காவல்துறை கழகத்தினரை கைது செய்து மண்டபம் ஒன்றில் அடைத்து வைத்தனர். கழகத் தோழர்களை சந்தித்து பாராட்டு தெரிவித்த வேளச்சேரி பகுதி தி.மு.க. செயலாளர் பாட்சா, அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்தார். இரவு 8 மணியளவில் சோதிடர் மாநாடு முடிந்த பிறகே தோழர்கள் விடுவிக்கப் பட்டனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, “எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்” - பரப்புரை இயக்கத்துக்கான பயணத் திட்டங்களை கழகச் செயல் வீரர்கள் மண்டபத்துக்குள்ளேயே இறுதி யாக்கினர்.

அடுத்து, சோதிட மூடத்தனங்களை விளக்கும் கருத்தரங்கத்தை சென்னை யில் நடத்துவதற்கு தோழர்கள் ஏற்பாடுகளைத் தொடங்கியுள்ளனர்.

– நமது செய்தியாளர்

### போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி

போராட்டம் நடக்கும் செய்தியறிந்து, சிறப்புரையாளராக அறிவிக்கப்பட்டிருந்த காவல்துறை அதிகாரி பெரியய்யா சோதிட மாநாட்டைப் புறக்கணித்துவிட்டார்.

# உசிலம்பட்டியில் பெரியார் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம்




மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் 20.02.15 வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பெரியார் கொள்கை விளக்கப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. 2012 ஆம் ஆண்டு கழகம் ஜாதிய வாழ்வியல் எதிர்ப்புப் பயணத்தை நடத்தியது. அந்தப் பயணம் இதே உசிலம்பட்டிப் பகுதிக்கு வந்த போது ஜாதி வெறியர்கள் நமது தோழர்களைக் கல்வீசித் தாக்கினர். தோழர் இராவணன் படுகாயமடைந்தார். எதிர்ப்புகளை மீறி அன்றே அப்பகுதியில் தெருமுனைக்கூட்டத்தை நடத்தி வந்தோம். அதன்பிறகு தாக்குதல் நடந்த அதே இடத்தில் உசிலம்பட்டி - தேனி சாலையில் உள்ள முருகன் கோவில் எதிரில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை ஆற்றினார். முன்னதாக ஒட்டன்சத்திரம் தோழர் பெரியார்நம்பி மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினார். பெரும்திரளான மக்கள் நிகழ்ச்சியை ஆர்வத்துடன் கண்டனர்.

மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி நடைபெறும்போதே ‘தேசீய தேவர் பேரவை’ என்ற அமைப்பினர் கூட்டத்தை நிறுத்தும்படி அடாவடியில் இறங்கினர். கழகத் தோழர்களும், காவல்துறையும் அவர்களை எதிர்கொண்டு அப்பகுதியிலிருந்து அவர்களை அப்புறப்படுத்தினர். ஜாதிய அமைப்பு குழப்பம் விளைவித்தாலும் கூட்டத்தைக் கவனித்துக்கொண்டிருந்த மக்கள் யாரும் கலையாமல் நிகழ்ச்சியை முழுமையாகக் கவனித்தனர். மதுரை மாவட்டச்செயலாளர் தோழர் ஆ.பாண்டியன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்களின் உரை எதிரிகள்கூட நமது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அமைந்திருந்தது. பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பெரியார் ஆற்றிய பணிகள் - இன்று வரையில் பல்வேறு துறைகளில் நிலவும் பார்ப்பனர்களின் ஆதிக்கம் - ஒட்டுமொத்த சமுதாயத்துக்கும் எதிரான பார்ப்பன ஆதிக்கத்தைக் கேள்விக்குள்ளாக்காமல் தாழ்த்தப்பட்டோரை எதிரியாக எண்ணும் ஆதிக்க ஜாதி மனநிலை ஆகியவற்றைப் பற்றி சான்றுகளுடன் விளக்கமாக உயைாற்றினார் தலைவர் கொளத்தூர் மணி. உசிலம்பட்டி பகுதிமக்களே எதிர்பாராத அளவில் பொதுமக்கள் கூடி, இறுதிவரை உரையை கவனித்தனர். இந்த கூட்டத்திற்கு உசிலம்பட்டி வழக்கறிஞர்கள் முருகபாண்டியன், பாலச்சந்திரன், காசி, பாஸ்கர் ஆகியோர் வருகைதந்து கழகத்தலைவரின் உரையை முழுமையாகக் கேட்டு, பாராட்டுக்களைத் தெரிவித்துச்சென்றனர்.

நிகழ்ச்சிக்கு மதுரை மாவட்டத்தலைவர் முருகேசன், தோழர்கள் வாசுகி, யாழ்மொழி, மாப்பிள்ளைசாமி, விருதுநகர் கணேசமூர்த்தி, வேங்கைமாறன், தேனி மாவட்டப்பொறுப்பாளர்கள் பெரியகுளம் குமரேசன், போடி சரவணன், தமிழ்நாடு மாணவர்கழகப் பொறுப்பாளர்கள் ஈரோடு வெங்கட், பெரியகுளம் உதயசங்கர், சரவணன், கெங்குவார்பட்டி முத்துப்பாண்டி, ஒட்டன்சத்திரம் பிரபு, கடத்தூர் காந்தி, ஆத்தூர் வின்சென்ட், திண்டுக்கல் பீட்டர், செம்பட்டி இராஜா, முனைவர் மணிமாறன், மதுரை பிரகதி, காலாண்டியூர் கனி, கரூர் மாவட்டப் பொறுப்பாளர்கள் மோகன்தாஸ், குளித்தலை சத்தியமூர்த்தி, தலைமைக்குழு உறுப்பினர்கள் இராவணன், தாமரைக்கண்ணன், தமிழ்நாடு மக்கள் கட்சி தோழர் கணேசன், உசிலம்பட்டி மனிதஉரிமைகள் இயக்கப் பொறுப்பாளர் இரவி ஆகியோர் உட்பட ஏராளமான தோழர்கள் கருஞ் சட்டையுடன் கலந்து கொண்டனர். உசிலம்பட்டியில் திராவிடர் விடுதலைக் கழகத்திற்கு ஒரு வலுவான அடிப்படையை இந்தக்கூட்டம் உருவாக்கியுள்ளது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 5th March 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | மார்ச் 12, 2015 | புரட்சி 14 | முழக்கம் 9 | விலை: ரூ.3.00

# அனைத்துக் கட்சிகள் ஆதரவோடு நடந்த இலுப்பநத்தம் பயிற்சி முகாம்–கூட்டம்






திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஒரு நாள் பயிற்சி முகாம் தலைவாசல் அருகே உள்ள இலுப்ப நத்தம் எனும் கிராமத்தில் 22.2.2015 அன்று சிறப்புடன் நடந்தது. கழகப் பொறுப்பாளர்கள் மகேந்திரன், காளிதாசு ஆகியோர் தீவிர முயற்சி எடுத்து ஒரு வார காலம் கிராமம் கிராமமாகச் சென்று, இளைஞர்களை சந்தித்து, பயிற்சி முகாம் குறித்து எடுத்துக் கூறி முகாமுக்கு வரச் செய்தனர். 11.30 மணியளவில் இலுப்பநத்தம் சிவன் கோயில் வளாகத்தில் உள்ள சமுதாயக் கூடத்தில் பயிற்சி முகாம் தொடங்கியது.70 மாணவர் மாணவியர் ஆர்வத்துடன் பங்கேற்றனர். மகேந்திரன் தொடக்க உரையைத் தொடர்ந்து, மூத்த பெரியார் தொண்டர் சதாசிவம் 30 நிமிடம் மாணவர் களிடம் பேசினார். தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘கடவுள்’ என்ற தலைப்பில் எளிமையாக கருத்துகளை எடுத்துரைத்தார். மதிய உணவுக்குப் பிறகு மீண்டும் 3 மணியளவில் பயிற்சி வகுப்பு தொடங்கியது.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பெரியார் வலியுறுத்திய ‘ஜாதி ஒழிப்பு’க் குறித்தும், ‘இளைஞர்கள் சமுதாயத்துக்கு தொண்டு செய்ய முன்வரவேண்டும்’ என்று வலியுறுத்தியும் பேசினார். மாணவர்களும், மாணவிகளும் சந்தேகங்களை கேள்விகளாக கேட்டனர். அனைத்துக்கும் விளக்க மளிக்கப்பட்டது. இலுப்பநத்தம் கிராமத்துக்கு இதுவரை எந்தக் கட்சி, இயக்கங்களைச் சார்ந்த தலைவர்கள் வந்தது இல்லை என்றும், இப்போது, கழகத் தலைவர், பொதுச் செயலாளர் வந்திருப்பது, தங்களுக்கு மிகவும் மகிழ்ச்சித் தருகிறது என்றும் பொது மக்கள், தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு, புகைப்படங்களை எடுத்துக் கொண்டனர்.

### பொதுக் கூட்டம்

மாலை 6 மணியளவில் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை எதிரிலுள்ள பொது வெளியில் தோழர்கள் அமைத்திருந்த மேடையில் பொதுக் கூட்டம் நடந்தது. மகேந்திரன் வரவேற்புரை யாற்றினார். உள்ளூர் கழகத் தோழர் பெ.காளிதாசு, கோ. பெரியசாமி ஆகியோர் உரையினைத் தொடர்ந்து, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். பெரியார்-அம்பேத்கர் என்ற தலைவர்களுக்கிடையே ஜாதி ஒழிப்பில் ஒருமித்த கருத்து இருந்ததையும் அவர்களுக்கிடையே நடந்த சந்திப்புகளையும் குறிப்பிட்டு, ஜாதியமைப்பு இப்போது பல்வேறு வடிவங்களில் தலைதூக்கி நிற்பதை சுட்டிக்காட்டி, இளைஞர்கள் இதை எதிர்த்துப் போராட முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி தனது உரையில், அம்பேத்கர் - ஜாதி ஒழிப்பு - பார்ப்பன எதிர்ப்பு சிந்தனைகளை விளக்கி, அரசியல் சட்டத்தை அம்பேத்கர் எழுதியபோது, அவர் சந்தித்த நெருக்கடிகளை குறிப்பிட்டு, ஒரு கூட்டத்தில், ‘இந்த சட்டத்தை எரிக்கும் முதல் ஆள் நானாகவே

(4 ஆம் பக்கம்)

## செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாடு – நினைவு பொதுக் கூட்டம்

1929 ஆம் ஆண்டு பிப். 17, 18 தேதிகளில் செங்கல்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநாடு, தமிழக சமூக வரலாற்றில் மிகவும் முக்கியத்துவமும், திருப்புமுனையும் கொண்ட மாநாடு ஆகும். மாநாட்டின் தலைப்பே, “தமிழ் மாகாண சுயமரியாதை மாநாடு” (திராவிட என்ற பெயரில் அல்ல) என்பதாகும். பெரியார் முன்னின்று ஏற்பாடு செய்த இந்த மாநாட்டின் தலைவர் டபிள்யூ.பி.ஏ. சவுந்தர பாண்டியன். மாநாட்டை திறந்து வைத்தவர் டாக்டர் சுப்பராயன். கொடி ஏற்றியவர் பி.டி.இராசன். மாநாட்டில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. முதல் தீர்மானமாக மாகாணங்களுக்கு உரிமைகள் வழங்குவது பற்றி கருத்து கேட்க வந்த பிரிட்டிஷ் தூதுக் குழுவான சைமன் கமிஷனை வரவேற்க வேண்டும் என்றும், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதுதான். தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள்:

தீண்டாமை ஒழிப்பு; வர்ணாஸ்ரம ஒழிப்பு; பெயருக்குப் பின்னால் ஜாதிப் பெயர் போடுவது ஒழிப்பு; மதக் குறியீடுகளை புறக்கணித்தல்; விவாகரத்து உரிமை; பெண்ணின் திருமணத்துக்கு குறைந்தபட்ச வயது 16; கல்வி நிறுவனங்களில் தாய் மொழிக் கல்வி; பொது நிதியிலிருந்து அனைவருக்கும் கட்டாயக் கல்வி; உயர் கல்விக்கு பொது நிதியை செலவிடாதிருத்தல்; தீண்டப்படாத வகுப்புப் பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகம்; உணவு, உடை வழங்குதல்; கடவுளுக்கு தரகன் கூடாது; கோயிலுக்காக ஒரு காசு கூட செலவழித்தல் கூடாது; புதிதாய் எந்தக் கோயிலும் கட்டக் கூடாது; உற்சவ கொண்டாட்டங்களை நிறுத்தி, அந்தப் பணத்தை மக்கள் நலனுக்குச் செலவிடுதல்; தீண்டப்படாத மக்களுக்கு அரசு நிலம் வழங்கி, பயிர் செய்ய நிதி உதவி செய்திடல்; தீண்டப்படாதவர்கள் எனப்படும் மக்களுக்கு அரசுப் பதவிகளில் முன்னுரிமை வழங்குதல்;

மற்ற வகுப்பு சிறுவர் சிறுமியருக்கு சமமான அந்தஸ்தைப் பெறும் வரையில் தீண்டப்படாதார் என்று சொல்லப்படும் பெண் குழந்தைகளுக்கு புத்தகம், உடை, உணவு வழங்குதல்; பள்ளி பாடத் திட்டத்தில் மூடநம்பிக்கைகளைப் பரப்பும் கருத்துகளை தடை செய்தல்; ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சொத்துரிமை; ஆண்களைப் போலவே பெண்களும் எல்லா வேலைகளையும் செய்ய வாய்ப்பு; தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாக பெண்களை மட்டுமே நியமித்தல்; மதக் கொள்கைகளை பரப்பும் நாடகம், நூல்களை நடிகர்களும், கலைஞர்களும், எழுத்தாளர்களும் நடிக்காமலோ எழுதாமலோ இருத்தல்; சாதி வேறுபாடு காட்டும் ஓட்டல்களின் அனுமதியை நீக்கம் செய்தல்; இரயில்வே சிற்றுண்டி விடுதிகளில் ஜாதி பேதத்தை ஒழித்தல்; தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி, சித்த மருத்துவத்தை வளர்த்தல், சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் பரப்ப தொண்டர் படை உருவாக்குதல் என்று பல புரட்சிகரமான தீர்மானங்கள் அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. நாட்டையே அதிர்ச்சியுறச் செய்த மாநாடாக அது விளங்கியது.

அந்த மாநாடு நடந்த செங்கல்பட்டில் கடந்த 19.2.2015 அன்று காஞ்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் அருகில் செங்கல்பட்டு தமிழ் மாகாண முதல் சுயமரியாதை மாநாடு நினைவு பொதுக் கூட்டம் மிகச் சிறப்பாக நடந்தது. கூட்டத்துக்கு வே. சரவணன் தலைமை தாங்கினார். கழக வழக்கறிஞர்கள் துரை. அருண், திருமூர்த்தி, கழகப் பொறுப்பாளர்கள் உமாபதி, அய்யனார், ஜான் மண்டேலா, செங்குட்டுவன், தினேஷ் குமார், தெள்ளமிழ்து ஆகியோரைத் தொடர்ந்து எழுத்தாளர் வே. மதிமாறன் சிறப்புரையாற்றினார். உ. ராஜ்குமார் நன்றி கூறினார். மாநாட்டு தீர்மானங்களை நினைவுகூர்ந்து தோழர்கள் பேசினர்.

(மாநாட்டு நினைவுகள் உள்ளே)

### தலையங்கம்

## பார்ப்பன பரிவாரங்களின் மிரட்டல்!

'புதிய தலைமுறை' தொலைக்காட்சி முன் சங் பரிவாரங்கள் வன்முறை வெறியாட்டம் போட்டிருக்கிறார்கள். தொலைக்காட்சி ஊழியர் மீது கடும் தாக்குதல் நடத்தி காமிராவையும் உடைத்திருக்கிறார்கள். காரணம் இதுதான்: மகளிர் நாளை முன்னிட்டு, 'பெண்களுக்கு தாலி தேவையா?' என்ற சிறப்பு விவாதம் ஒன்றை இந்த நிறுவனம் ஒளிபரப்ப திட்டமிட்டிருந்தது. விவாதம் ஒளிபரப்புவதற்கு முன்பே தடை செய்யவேண்டும் என்பதே சங்பரிவாரங்களின் கோரிக்கை. மிரட்டலுக்கு அஞ்சி தொலைக்காட்சி நிறுவனம் நிகழ்ச்சியை இரத்து செய்துவிட்டது. ஏற்கெனவே பண்பாடு குறித்த ஒரு விவாத அரங்கமும், எதிர்ப்பின் காரணமாக இந்தத் தொலைக்காட்சி நிறுத்திவிட்டது. ஒரு ஊடகம் – எதை ஒளிபரப்ப வேண்டும், எதை ஒளிபரப்பக் கூடாது என்பதை நிர்ணயிக்கும் உரிமை, தங்களுக்கே உண்டு என புறப்பட்டிருக்கிறது, சங்பரிவாரம். இந்தத் தாக்குதலை காவல்துறை கைகட்டி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது என்பது மற்றொரு தலைகுனிவான செய்தி.

தாலி என்பது பெண்களை அடிமைப்படுத்தும் சின்னம் என்று பெரியார் இயக்கம், பெண்ணுரிமை பார்வையில் முன் வைத்து வரும் கருத்தை முற்போக்குப் பார்வை கொண்ட பெண்கள் ஏற்று, தாலி கட்ட மறுத்து வருகிறார்கள். பழந்தமிழர் திருமண முறைகளில், 'தாலி கட்டும்' வழக்கமே இருந்தது இல்லை என்று இராஜமாணிக்கனார் போன்ற தமிழறிஞர்கள், சான்றுகளுடன் நிறுவி இருக்கிறார்கள். கணவனைவிட – கணவன் கழுத்தில் கட்டிய தாலிதான் 'புனிதமானது' என்ற 'அடிமைச் சிந்தனை'யை பார்ப்பனிய பெண்ணடிமைக் கருத்துகள் வழியாக சமூகத்தில் ஊட்டி வளர்க்கப்பட்டு வருகின்றன. மகளிர் நாளில்கூட பெண்களை அடிமைப்படுத்தும் ஒரு பிரச்சினையை விவாதத்துக்கு கொண்டுவரவே அனுமதிக்க முடியாது என்று 'கலாச்சார காவலர்களாக' ஒரு மதவெறிக் கும்பல் வெறிபிடித்து அலைவது வெட்கக் கேடானது.

2012ஆம் ஆண்டு டிசம்பரில், இந்தியாவின் தலைநகரமான புதுடில்லியில் ஓடும் பேருந்தில், டெல்லி மாணவி ஒருவர் கொடூரமாக பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு, நாடு முழுதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. இந்த நிலையில் பாலுறவு வன்முறைக் குற்றவாளிகள், மன நிலையை உலகம் முழுதும் கொண்டு சென்று பெண்களுக்கு எதிரான வக்கிர சிந்தனைகளை அம்பலப்படுத்தும் முயற்சியில் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த லெஸ்லி உட்வின் என்ற பெண் ஆவணப்படம் ஒன்றை தயாரித்தார். 'இந்தியாவின் மகள்' என்ற ஆவணப்படத்துக்காக மத்திய உள்துறை அமைச்சகத்தின் அனுமதி பெற்று, திகார் சிறையில் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கியிருக்கும் கொலையில் தொடர்புடைய குற்றவாளியான முகேஷ் சிங்கி என்பவனிடம் பேட்டியையும் வாங்கியிருந்தார். குற்றவாளி அளித்த பேட்டி, அவனது பெண்களைப் பற்றிய வக்கிரப் பார்வை, 'ஆணாதிக்கத்தின் நியாயமாக'வே பொதுப் புத்தியில் பதிந்து கிடப்பதை உணர்த்துவதாகவே இருந்தது. "திருமணமாகாத ஒரு பெண், இரவு நேரங்களில் ஆண் துணையுடன் நடமாடுவதே தவறு; அவர்கள் அணியும் நவீன உடைகளே, காம வெறியைத் தூண்டுகின்றன. அந்தப் பெண்ணை பாலுறவுக்கு நான் கட்டாயப்படுத்திய போது, அந்தப் பெண் எதிர்ப்பு தெரிவித்திருக்கக் கூடாது. எதிர்ப்பு தெரிவித்ததால்தான் அவளை கொலை செய்தோம். இதற்காக நான் வருத்தப்படவில்லை" என்று அந்தப் பேட்டியில் தனது செய்கைக்காக எந்த குற்றற உணர்வும் இல்லாமல், அவன் பேசியிருந்தான். இந்த ஆவணப் படத்தை வெளியிட மோடி ஆட்சியின் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தடை போட்டார். இந்தியாவைப் பற்றி உலக நாடுகளில் மோசமான சித்திரத்தை இந்தப் படம் உருவாக்கிவிடும் என்று சங் பரிவாரங்கள் வாதிட்டன. (இவர்கள் கட்சியைச் சார்ந்த கிரண்பேடி மற்றும் பா.ஜ.க. பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் படத்தை திரையிட வேண்டும் என்றே கூறுகிறார்கள்)

படத்தைத் தயாரித்த உட்வின் என்பவரே, தனது 18ஆவது வயதில் பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டவர் தான். தற்போது 49 வயதை எட்டியுள்ள அவர் திகார் சிறையில் பாலுறவு வன்முறைக் குற்றவாளிகள் 8 பேரிடம் பேட்டி எடுத்துள்ளார். பெண்கள் மீதான வன்முறைக்கு பின்னணியில் உள்ள ஆணாதிக்க கருத்துகளை வெளிக் கொண்டு வந்து, அந்த கருத்துகளை தகர்க்க வேண்டிய இயக்கங்கள் உருவாக வேண்டும் என்பதே படத் தயாரிப்பாளரின் நோக்கம். இந்தியாவில் இப்போது தடை செய்யப் போய் இந்தப் படம் இலண்டன் பி.பி.சி., அமெரிக்கா என்று உலகம் முழுதும் ஒளிபரப்பப்பட்டு வருகிறது. பெண்களை நுகர் பொருள்களாகவே பார்க்கும் இந்து-பார்ப்பனிய சிந்தனைக்கு எதிராக உலகம் முழுதுமிருந்தும் பெண்களின் கண்டனக் குரல் வெடிக்கத் தொடங்கியிருக்கிறது. குளிக்கப் போய் சேறு பூசிக் கொண்ட கதையைப் போல் சங்பரிவாரங்களின் கோர முகம் வெளிப்பட்டு நிற்கிறது.

மனு சாஸ்திரமும், பகவத் கீதையும் என்ன கூறுகிறது?

- படுக்கை, ஆசனம், அலங்காரம், கோபம், பொய், துரோக சிந்தனை இவற்றினை பெண்களுக்காகவே மனு கற்பித்தார். – மனு அத்தியாயம்–9; சுலோகம்–17.
- பெண்களையும் பிராமணரல்லாதாரையும் கொல்வது பாவமில்லை. – மனு அத்.11; சுலோகம்–65.

மேற்குறிப்பிட்ட மனுதர்மத்தின் கருத்தைத்தான் குற்றவாளி முகேஷ் சிங்கி கூறியிருக்கிறான்!

இவன் 'மனு சாஸ்திரத்தை'ப் படித்திருக்க மாட்டான். ஆனால், அந்த சிந்தனைதான் அவனது மூளையில் காலம் காலமாக திணிக்கப்பட்டிருக்கிறது. 'பாவ யோனியில் பிறந்தவர்கள் பெண்கள்' என்று கூறும் பகவத் கீதையை நாட்டின் தேசிய நூலாக அறிவிக்கத் துடிக்கும் ஆட்சியாளர்கள், இப்போது இந்த ஆவணப்படமும் அந்த கருத்தை வெளிப்படுத்தும்போது ஏன் பதற வேண்டும்?

தொலைக்காட்சியில் விவாதங்களுக்கு வந்து விடாமலும், ஆவணப் படங்கள் வழியாக உலகத்தின் பார்வைக்கு தெரியாமலும், தங்களது நாற்றம் பிடித்த பார்ப்பனிய மனுவாத பெண்ணடிமை கருத்துகளை காப்பாற்றிவிடலாம் என்பதே இவர்களின் கனவு. அது ஒருபோதும் பலிக்காது; சீழ் பிடித்த சிந்தனைகள் வெளிச்சத்துக்கு வந்தே தீரும்; கருத்துகளை விவாதிக்கவே நடுங்கும் கருத்துக் கோழைகளை மக்கள் அடையாளம் காண வேண்டும்!

## "எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்"

## சென்னை மண்டல பயணத் திட்டம்

சென்னையில் மார்ச் 20இல் தொடக்க விழா பொதுக் கூட்டம் பெரம்பூரில் நடக்கிறது.

*மார்ச் 21 :* காலை 10.00 மணி - பொன்னேரி, 11.30 மணி - மீஞ்சூர், மாலை 3 மணி - மணலி புது நகர் (மணலி), 5 மணி - திருவொற்றியூர், இரவு சென்னை - தங்கல்

*மார்ச் 22:* காலை 10.00 மணி - திருவான்மியூர், 11.30 மணி - சேளம் பாக்கம், மாலை 3 மணி - திருப் போரூர், 5 மணி - மாமல்லபுரம் - இரவு தங்கல்.

*மார்ச் 23:* காலை 10 மணி - அனுமந்தபுரம், 11.30 மணி - கல்பாக்கம், மாலை 3 மணி - கடப் பாக்கம், 5 மணி - மரக்காணம், இரவு - கடலூர் - தங்கல்

*மார்ச் 24:* காலை 10 மணி - போஸ்ட் ஆபீஸ், கடலூர். 11.30 மணி - ஆலப்பாக்கம், மாலை 3 மணி - புதுசத்திரம், 5 மணி - பரங்கிப் பேட்டை, இரவு - சிதம்பரம் - தங்கல்

*மார்ச் 25:* காலை 10 மணி - புவனகிரி, காலை 11.30 மணி - சேத்தியாதோப்பு, மாலை 3 மணி - வடலூர், 5 மணி - நெய்வேலி - தங்கல்.

*மார்ச் 26:* காலை 10 மணி - மங்கலம், காலை 11.30 மணி - விருத் தாசலம், மாலை 3 மணி - திட்டக் குடி, 5 மணி - தொழுதூர் - தங்கல்.

*மார்ச் 27:* காலை 10 மணி - வேப்பூர், காலை 11.30 மணி - அடரி மாலை 3 மணி - மாங்குளம், 5 மணி - சிறுபாக்கம் - தங்கல்.

*மார்ச் 28:* காலை 10 மணி - நைனார்பாளையம், காலை 11.30 மணி - சின்ன சேலம், மாலை 3 மணி - கள்ளக்குறிச்சி, 5 மணி - மூரார்பாளையம், இரவு தங்கல் - கடுவனூர்.

*மார்ச் 29:* காலை 10 மணி - சங்கராபுரம், காலை 11.30 மணி - பகண்டை ரோடு, மாலை 3 மணி - மூங்கில்துறைப்பட்டு, 5 மணி - திருவண்ணாமலை - தங்கல்.

*மார்ச் 30:* காலை 10 மணி - கீழ்ப்பெண்ணாத்தூர், காலை 11.30 மணி - செஞ்சி, மாலை 3 மணி - மேல் மலையனூர், 5 மணி - அவலூர் பேட்டை- தங்கல்.

*மார்ச் 31:* காலை 10 மணி - சேத்துப்பட்டு, காலை 11.30 மணி - வந்தவாசி, மாலை 3 மணி - உத்திர மேரூர், 5 மணி - காஞ்சிபுரம்.

மாவட்ட செயலாளர் உமாபதி பயணக்குழு தளபதியாக செயல் படுவார். தோழர்களுக்கான கடமைகள் பகிர்ந்தளிக்கப்பட் டுள்ளன.

**– தென்சென்னை, வடசென்னை மாவட்டக் கழகங்கள்**

**வந்த கடிதம்**

## நல்ல விளக்கங்களைத் தந்த பொது சிவில் சட்டம் கட்டுரை

இந்து சிவில் சட்டம் குறித்து விரிவான கட்டுரையை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' (பிப்.19, மார்ச் 5) வெளியிட்டிருந்தது. நல்ல கருத்து வெளிச்சத்தைத் தந்தது. இது தொடர்பாக மேலும் சில கருத்துகளை குறிப்பிட விரும்புகிறேன்.

யுனிசெப் தரும் புள்ளி விவரப்படி உலகில் குழந்தை திருமணம் நடைபெறும் நாடுகளின் வரிசையில் இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது. வரதட்சணை கொடுமை தடுப்புச் சட்டமிருந்தும் வரதட்சணை கொடுமைகள், கொலைகள் குறையவில்லை. குடும்ப வன்முறை சட்டமி ருந்தும் பெண்கள் மீதான வன்முறைகள் குறையவில்லை. பலதார மணம் இந்து திருமண சட்டப்படி தடுக்கப்பட்டிருந்தாலும், நான்கு மனைவியரை திருமணம் செய்து கொள்ள அனுமதித்த முசுலீம்கள் மத்தியில் இதன் சதம் 5.2 ஆக உள்ள நிலையில், இந்துக்கள் மத்தியில் 5.8 சதமாகவும், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் 9 சதமாகவும், இதர பழங்குடி மக்கள் மத்தியில் 14 சதமாகவும் உள்ளது. பெண்களுக்கு சட்டப்படி சொத்துரிமை வழங்காமல் ஏமாற்றவே முயற்சி நடைபெறுகிறது. விவாகரத்தான முசுலீம் பெண்களுக்கு இத்தா காலத்திற்குப் பின்பு ஜீவானாம்சம் கிடைக்காமல் ஆதரவற்ற நிலையில் விடப்படுவதையும் மூன்று முறை தலாக் சொல்லி விவாகரத்து செய்யும் முறையையும் முசுலீம் பெண்கள் அமைப்பே எதிர்த்துள்ளது. கிருத்துவ தனிநபர் சட்டப்படி தகாத ஒழுக்கமுள்ள மனைவியை விவாகரத்து செய்ய கணவன் மனு கொடுத்தால், அந்த குற்றச்சாட்டி லிருந்து விடுவித்துக் கொள்ளும் பொறுப்பு மனைவியைச் சார்ந்ததாம். பஞ்சாபில் சொத்தில் பிரிவினை ஏற்படக் கூடாது என்பதற்காக சகோதரர்கள் அனைவரும் ஒரே பெண்ணை திருமணம் செய்து கொள்ளும் நிலை உள்ளது. தென்னகத்தில் இந்துக்கள் மத்தியில் சகோதரியின் மகளை திருமணம் செய்து கொள்ளும் நிலை வடநாட்டில் இல்லை. இந்து கூட்டுக் குடும்பம் என்ற பெயரால் அனுபவிக்கும் வரிச் சலுகை மற்றவர்க்கு கிடையாது. இப்படி பெண்களுக்கு பாலின சமத்துவத்தை மறுக்கிற, பெண்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டுகிற நிலை அனைத்து தனிநபர் சட்டங்களிலும் உள்ளதை முதலில் அந்தந்த சமூகங்கள் களைய முன்வர வேண்டும்.

தனக்கு அரசியல் சட்டந்தான் கீதை, குரான், பைபிள் என்று கூறும் பிரதமர் மோடி, அரசியல் சட்டத்தின் புனிதத்தைக் காக்க நினைத்தால் முதலில் மேற்கண்ட முரண்களையும், பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதையும் மாற்ற முன்வரவேண்டும். இல்லையெனில், பாரம்பரிய அம்சங்களுடன் புதிய சூழலுக்கேற்ற அம்சங்களையும் இணைத்து பொது சிவில் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கூறும் அவரின் குரல், ஆர்.எஸ்.எஸ். குரலாகவே எதிரொலிக்கும்.

**– இளைய சிம்மன், சென்னை–600 014.**

# ‘பால் சொசைட்டி’யில் நிலவும் தீண்டாமையை தட்டிகேட்ட கழகத் தோழர் மீது கொலை வெறி தாக்குதல்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை கூதாம்பி காலனியைச் சேர்ந்தவர் மூர்த்தி. இவர் நமது கழகத்தின் துணை அமைப்பான தமிழ்நாடு மாணவர் கழகத்தில் ஈரோடு வடக்கு மாவட்டத்தில் பொறுப்பாளராக உள்ளார். இவர் ஊருக்கு அருகில் உள்ள கூதாம்பி என்ற ஊர் உள்ளது. இங்கு ஆதிக்க சாதியினைச் சார்ந்த மக்கள் குடியிருப்பு உள்ளது. இப்பகுதியில் அமைந்துள்ள அரசுக்கு சொந்தமான கூட்டுறவு பால்சொசைட்டி உள்ளது. இதில் அப்பகுதியை சுற்றியுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பால் ஊற்றுவது இல்லை. அவர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்வதுமில்லை. பால் கொள்முதல் செய்யும் போது தாழ்த்தப்பட்டோரிடம் உங்களது பாலில் புரத அளவு குறைவாக உள்ளது. டெஸ்ட் சரியாக வருவதில்லை என்று ஏதேனும் காரணம் சொல்லி அவர்களது பாலை வாங்குவதில்லை. அதே சமயம் அவர்களிடம் பாலை வாங்க செல்லும் பொழுது உங்களுக்கு பால் ஊற்ற முடியாது; அப்படியே பால் வாங்க வேண்டுமென்றால் வெளியிலிருந்துதான் வாங்க வேண்டும் என்று கூறி வருகின்றார்கள். அதனைப் பற்றி அரசு அதிகாரியிடம் புகார் கூறியும் நடவடிக்கை இல்லை. கூதாம்பி பால் சொசைட்டியில் நடைபெறும் தீண்டாமைக் கொடுமைக்கு தீர்வுகாண வேண்டி கடந்த 11.11.2014 அன்று மாணவர் கழகத் தோழர்கள் மூர்த்தி சொசைட்டியில் பால் வாங்க காலையில் சென்றார். அப்பொழுது பால்சொசைட்டிக்குள்ளே செல்லும் பொழுது அங்கிருந்த ஆதிக்க சக்திகளான செகரட்டரி கோவிந்தராஜ், உதவியாளர் வீரக்குமார் மற்றும் செல்வன் ஆகியோர் மூர்த்தியை சாதியை சொல்லி, ‘வெளியே போடா என்ன தைரியம் இருந்தா உள்ளே வருவே’ என்று தகாத வார்த்தைகளில் பேசிக் கொண்டு அவரை அடித்து உதைத்தனர். தாக்குதலுக்கு உள்ளான மூர்த்தி, நமது தோழர்களால் அருகில் உள்ள கோபி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் திங்களூர் காவல் துறை அதிகாரிகளால் மிரட்டப்பட்டு வலுக்கட்டாயமாக ஆம்னிவேனில் கவுந்தப்பாடி காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு காவல் ஆய்வாளர் முன்னிலையில் (கோவிந்தராஜ், வீரக்குமார் செல்வன்) அவர்கள் மீது நீ வழக்கு கொடுக்கக் கூடாது என்று மிரட்டப்பட்டார். அங்கிருந்த தோழர்களின் எதிர்ப்புகளால் இரவு 10.00 மணிக்கு மூர்த்தியின் புகார் மனுவை நிராகரித்து காவல் ஆய்வாளரின் ஆலோசனை படி மூர்த்தி எழுதியதாக புகார் மனு தயார் செய்யப்பட்டு அதில் மூர்த்தியை மிரட்டி கையெழுத்து வாங்கி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. ஆனால் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை காவல் துறை அதிகாரிகளிடம் ஏன் கைது செய்யவில்லை என்று கேட்டால் அவர்கள் தலைமறைவாகி விட்டனர் என்று பதில் கூறினார்.

இந்நிலையில் குற்றவாளிகளுக்கு நீதிமன்ற முன்பிணை கிடைத்தது. நீதிமன்ற பிணை கிடைத்த மகிழ்ச்சியில் ஆதிக்க சாதி வெறியர்கள் மூர்த்தி குடியிருக்கும் கூதாம்பி காலனிக்க உள்ள சாலையில் இரவு பட்டாசு வெடித்து கொண்டாடியதோடு மட்டுமில்லாமல் அங்கு இருந்த மக்களை சாதியை சொல்லி மிகக் கடுமையாகவும் மிரட்டும் தொனியுடன் சத்தம் போட்டுவிட்டு சென்றனர். உடனே அங்கு இருந்த தோழர்கள் காவல் நிலையத்திற்கு (திங்களூர்) போனில் தகவல் அளித்தனர். ஆனால் காவல் துறை அதிகாரிகள் யாரும் வரவில்லை. இது குறித்து அடுத்த நாள் காலை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்குப் பதிவு அஞ்சல் அனுப்பப்பட்டது. அதன் பின்னரும் காவல் துறை ஆய்வாளரிடம் புகார் மனு கொடுத்த போது தொடர்ந்து வழக்கு கொடுக்க வேண்டாம். அவர்களை (ஆதிக்க சாதி) அழைத்து, ‘இதற்கு மேல் இது போல் செய்ய மாட்டேன்’ என்று எழுதி வாங்கி தருகிறேன் என்று கூறினார். அடுத்த நாள் அவர்களை வரவழைத்து எழுதி வாங்கப்பட்டது.

இந்நிலையில் நமது தோழர் மூர்த்தி கல்லூரி முடித்து வீடு திரும்பும் பொழுது ஆதிக்க சாதி வெறியர்களான செல்வம் மற்றும் வீரக்குமார் ஆகியோர் தொடர்ந்து கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இச்சம்பவம் முடிந்து மூன்று மாதங்களுக்கு பிறகு 03.03.2015 அன்று மூர்த்தி மீண்டும் பால் சொசைட்டிக்கு பால் வாங்க சென்றார். அப்பொழுது அங்கு இருந்த கோவிந்தராஜ், மோகன்ராஜ், மகேஷ், தமிழரசு உள்ளிட்ட ஆதிக்க சாதி வெறியர்கள் உனக்கு பால் ஊத்த முடியாது என்று கூறி அவரை மிரட்டி உள்ளார்கள். இது குறித்து மூர்த்தி கழகத் தோழர் அர்ச்சுனனிடம் தொலைபேசியில் கூறி உள்ளார். இதை கேட்டு அங்கு சென்ற அர்ச்சுனன் மற்றும் மூர்த்தி ஆகியோர் மீது அங்கு இருந்த ஆதிக்க சாதியினர் கொலை வெறி தாக்குதல் நடத்தி உள்ளனர். இதை அர்ச்சுனன் காவல் துறைக்கு தகவல் கொடுத்ததோடு மட்டுமில்லாமல் அருகில் இருந்த கழகத் தோழர்கள் துரை மற்றும் சாக்கியர் பேரவை சார்ந்த கார்த்தி ஆகியோர்க்கு தகவல் கொடுத்தார். தோழர்கள் அனைவரும் அங்கு சென்று பார்த்த பொழுது அங்கு மூர்த்தி இல்லை காவல்துறை அதிகாரிகள் வந்த பின்பு பால் சொசைட்டியை திறந்து பார்த்தபொழுது அதனுள் மூர்த்தி மயங்கி நிலையில் கிடந்தார். (ஆதிக்க சாதி வெறியர்கள் மூர்த்தியை மீது கொலை வெறி தாக்குதல் நடத்தி பால்சொசைட்டிக்கு உள்ளே வைத்து பூட்டி விட்டார்கள்) உடனே நம் தோழர்கள் பதறிபோய் 108க்கு தகவல் கொடுத்தார்கள். அங்கு வந்த 108-ல் மூர்த்தியை ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க முயற்சி எடுத்தனர். ஆனால் அங்கு இருந்த காவல் துறை உதவி ஆய்வாளராலும் ஆதிக்க சாதி வெறியர்களாலும் 108 ஆம்புலன்சை தடுத்து, ஆய்வாளர் வந்தால் தான் வண்டியை விடுவோம் என்று மறுத்து விட்டனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த கழகத் தோழர்கள் மீது காவல்துறை அதிகாரிகளின் முன்னிலையில் ஆதிக்க சாதி வெறியர்கள் தாக்குதல் நடத்த முனைந்தனர். உடனே கழகத் தோழர்கள் அங்கு இருந்து தப்பி அர்ச்சுனன் தோழரை மட்டும் கொண்டு வந்து கோபி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பால் சொசைட்டியில் மயக்க நிலையில் இருந்த மூர்த்தியை அங்கு இருந்த காவல் நிலையம் கொண்டு சென்று அங்கு வைத்து சாதி வெறியர்களில் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். ஆனால் தாக்குதலுக்கு உள்ளான மூர்த்தியின் மீது ஆதிக்க சாதி வெறியர்களோடு கை கோர்த்த காவல்துறை பொய் வழக்கு போட்டு மூர்த்தியையும் கைது செய்தனர். தோழர் மூர்த்தி இப்பொழுது பொள்ளாச்சி சிறுவர் சீர்திருத்த பள்ளியில் அடைக்கப்பட்டுள்ளார்.

கழகத் தலைமைக் குழு உறுப்பினர் ஈரோடு இரத்தினசாமி, ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளரைச் சந்தித்து முழு செய்திகளையும் கூறி கோபி காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் உள்ளிட்ட காவல் துறையினரும் ஆதிக்கசாதியினருக்குத் துணைபோகும் போக்குகளை எடுத்துக் கூறி விளக்கியதன் காரணமாக காவல் கண்காணிப்பாளர் வழக்கை கோபி துணைக் கண்காணிப்பாளருக்குப் பதிலாக சத்திய மங்கலம் துணைக் கண்காணிப்பாளரை விசாரணை அதிகாரியாக மாற்றி நியமித்துள்ளார்.

**– நமது செய்தியாளர்**

# 1929 செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டின் புரட்சி

***1929 டிசம்பர் 17, 18 தேதிகளில் செங்கல்பட்டில் நடந்த “முதல் தமிழ் மாகாண சுயமரியாதை மாநாடு” குறித்து ‘குடிஅரசு’ வெளியிட்ட தகவல்களின் தொகுப்பை இளைய தலைமுறையினர் பார்வைக்கு முன் வைக்கிறோம்.***

- *சுயமரியாதை மாநாடு - பார்ப்பன வெறுப்பு அடிப்படையில் நடத்தப்படுவதாகவும், அரசாங்க ஆதரவோடு நடத்தப்படுவதாகவும் - ‘போல்விஷம்’ எனும் மார்க்சிய சிந்தனையை பரப்புவதற்கான மாநாடு என்றும், ஆளுநருக்கு எதிரிகள் புகார் கடிதங்களை அனுப்பினார்கள். ஆனாலும், இது குறித்து கவலை இல்லை என்றும், உயிரையும் கொடுத்து பெறவேண்டியதே ‘சுயமரியாதை’ அது விலை மதிப்பற்றது என்றும் பெரியார் எழுதினார்.*
- *எதிரிகள் நினைப்பதுபோல் சுயமரியாதை இயக்கம் தளர்ந்துவிடாது என்று எழுதிய ‘குடிஅரசு’ (13.1.1929) - “இப்போது எந்தவிதமான மாநாடு எங்கு நடந்தாலும் சுயமரியாதைக் கொள்கைகள் கொண்ட தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டு வருகின்றன” என்று சுட்டிக் காட்டியது.*
- *சுயமரியாதை இயக்கத்துக்கு ருஷ்யா, ஜப்பான், சைனா, துருக்கி, ஈஜிப்ட், ஆப்கானிஸ்தானம் போன்ற நாடுகள், வழிகாட்டி வருவதாகவும் ‘குடிஅரசு’ குறிப்பிட்டது. ‘சுயமரியாதை இயக்கம்’ உலகக் கண்ணோட்டத்தில் தொடங்கப்பட்டிருப்பதை இது உணர்த்துகிறது.*
- *‘திராவிடர்’ என்ற சொல்லை முன்வைத்து இப்போது சில குழப்பவாதிகள், பெரியார் இயக்கத்தையே சிறுமைப்படுத்த நினைப்பது போல் ‘சுயமரியாதை’ என்ற பெயருக்கும் அப்போது குழப்பவாதிகள் சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதற்கு, ‘குடிஅரசு’ இவ்வாறு பதில் எழுதியது. “சுயமரியாதை இயக்கம் என்றால் சுயமரியாதை இல்லாதவர்களின் இயக்கம் என்று பிறர் கருத மாட்டார்களா?” என்கிறார்கள். அப்படியானால் நாம் அவர்களை “சன்மார்க்க இயக்கம் என்றால் அது துன்மார்க்கர்களுடைய இயக்கமாகிவிடுமா சைவ சித்தாந்த இயக்கம் என்பது “அசைவர்களின் கூட்டமாகி விடுமா? அதுபோலவே ‘ஜஸ்டிஸ்’ இயக்கம் என்பது ‘இன்ஜஸ்டிஸ்’காரர்கள் இயக்கம் என்றாகி விடுமா?” - என்று கேட்கிறோம் என்று ‘குடிஅரசு’ பதிலளித்தது. (17.2.1929)*
- *36 மைல் நீள ஊர்வலம் சென்னையிலிருந்து புறப்பட்டு செங்கல்பட்டை அடைந்தது. மாநாட்டுத் தலைவர்கள் மோட்டார் கார்களில் அணி வகுக்க வழி நெடுக - மக்கள் உற்சாக வரவேற்பு தந்தனர் மலர் பொழிதல் - ஒலி முழக்கங்களுடன் காலை 8.30 மணிக்கு சென்னை தியாகராயர் மண்டபத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டது.*
- *வழி நெடுக மேளதாளங்களோடு வரவேற்று, வரவேற்புப் பத்திரங்களை வாசித்து சிற்றுண்டிகளை வழங்கினார்கள். மாகாணத்தின் முதல்வர் டாக்டர் சுப்பராயன், அமைச்சர் சேதுரத்தினமய்யர், முத்தையா முதலியார், தாலுக்கா போர்டு தலைவர்கள், சட்டசபை உறுப்பினர்கள், பெரியார் ஈ.வெ.ராமசாமி, சவுந்தரபாண்டியன் என ஏராளமான தலைவர்கள் மோட்டார் காரில் ஊர்வலமாக வந்தனர்.*
- *மாநாட்டு பந்தலில் 20,000 பேர் திரண்டிருந்தனர். மாநாட்டு முகப்பு, மிகப் பெரும் அலங்காரமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. மாநாட்டு அரங்கிற்குள் வீட்டுப் பொருள் காட்சிகள், தொழில் கண்காட்சிகள், சிற்றுண்டி சாலைகள், ஆங்கில முறை ஓட்டல்கள், விவசாய கண்காட்சிகள், எந்திர கண்காட்சிகள், வாசக சாலைகள், இடை இடையே தலைவர்கள் உருவச் சிலைகள், பூந்தோட்டங்கள், 2000 தோரண விளக்குகள், ‘சுயமரியாதையே பிறப்புரிமை’ என்று பொறிக்கப்பட்ட காந்த விளக்குகள் என எழில் குலுங்கியது மாநாடு அரங்கு. 4, 5 இடங்களில் ‘லவுட் ஸ்பீக்கர்’ எனும் ஒலிக் கருவிகள் அமைக்கப்பட்டிருந்தன.*
- *காலை நிகழ்ச்சிகளாக பனகல் அரசர் படத்தை அரசு சட்டசபை உறுப்பினர் எம்.கிருஷ்ண நாயர் திறந்து வைத்தார். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. முதல் நாள் பிற்பகல் தலைவர் உரை, பிரதிநிதிகள் உரை, இரவு சாப்பாடு.*
- *இரண்டாம் நாள் வாலிபர் மாநாட்டுடன்*

*(4 ஆம் பக்கம்)*

DATE OF PUBLICATION 12.03.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# ஏற்காட்டில் கழகப் பயிற்சி முகாம்

திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்காடு ஒன்றியத்தின் சார்பாக ஒரு நாள் பயிற்சி முகாம் திலகம் தங்கும் விடுதியில் 1.3.2015 ஞாயிறன்று நடைபெற்றது.

இந்தப் பயிற்சி முகாமில் ஏற்காடு பகுதித் தோழர்கள் மற்றும் சேலம் பகுதித் தோழர்கள் உள்பட நாற்பதிற்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்தப் பயிற்சி வகுப்பின் முதல் அமர்வாக தூத்துக்குடி பால் பிரபாகரன், 'பெரியாரியல்' எனும் தலைப்பில் வகுப்பெடுத்தார்.

உணவு இடைவேளைக்குப் பிறகு இரண்டாம் அமர்வாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'திராவிடம்', 'தமிழ் தேசியம்' எனும் தலைப்பில் வகுப்பெடுத்தார். பின்பு தோழர்களின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார்.

மாவட்டப் பொறுப்பாளர்களால் தேர்வு செய்யப்பட்ட ஏற்காடு ஒன்றிய புதிய பொறுப்பாளர்களை கழகத் தலைவர் அறிமுகப்படுத்தினார்.

ஏற்காடு ஒன்றியத் தலைவர் - கு. சரவணன், முண்டகம்பாடி.

ஏற்காடு ஒன்றியச் செயலாளர் - இரா. கார்த்திகேயன், ஏற்காடு.

ஏற்காடு ஒன்றியத் துணைத் தலைவர் - இரா. ஞானசேகரன், முண்டகம்பாடி.

ஏற்காடு ஒன்றியச் செயலாளர் - பொ. இராதாகிருஷ்ணன், முண்டகம் பாடி.

ஏற்காடு ஒன்றியப் பொருளாளர் - இரா. உலகநாதன், முண்டகம்பாடி.

பயிற்சி வகுப்பின் இறுதியில் ஏற்காடு இரா. கார்த்திகேயன் இயக்கிய 'முரண்' எனும் குறும்படம் திரையிடப்பட்டது. கழகத் தலைவர் வெளியிட, சேலம் மாவட்ட சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத் தலைவர் பிரபு பெற்றுக் கொண்டார்.




(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கியது. தலைவர் மாநாட்டுத் தலைவர் சுரேந்திரநாத் ஆரியா. தமிழ்நாடு முழுதும் கிராமம் கிராமமாகச் சுற்றி சுயமரியாதைப் பிரச்சாரம் செய்வது என்றும், பிரச்சாரத்துக்கு பனகல் அரசர் பெயர் சூட்டுவது என்றும் தலைவர் அனுமதியோடு பெரியார் இராமசாமி அறிவித்தார். உற்சாகத்தோடு வரவேற்ற இளைஞர்கள் - அதே நிகழ்வில் பிரச்சாரத்துக்கு தங்கள் பெயர்களைப் பதிவு செய்தனர்.

- மாநாட்டுச் செலவுக்காக உண்டியல் வைக்கப்பட்டிருந்தது. உண்டியலில் வசூலான தொகை ரூ.3000 (1929இல் இத்தொகையின் மதிப்பு மிகப் பெரிது; பவுன் விலை ரூ.7 விற்ற காலம்)
- இரண்டாம் நாள் மாநாட்டின் இறுதியில் நன்றி கூறிய பெரியார் இராமசாமி குறிப்பாக பெண்களுக்கு முதல் நன்றியை கூறினார். மகாநாடு நடத்த ஒத்துழைத்தவர்களாக ஜமீன்தார் அப்பாசாமி, வள்ளலார் வேதாசலம், ராவ் பகதூர் கிருஷ்ணசாமி, கண்ணப்பர் ஆகியோர் பெயரைக் குறிப்பிட்ட பெரியார் இராமசாமி, தனது விருப்பப்படி செயல்பட்டு, எல்லா வகையிலும் உதவிய வாழ்க்கைத் துணைவியர் நாகம்மையாருக்கும் நன்றி கூறினார்.
- இதன் பிறகு - இரவு சாப்பாட்டுக்குப் பிறகு, இரவு 10 மணிக்கு மேல் பொதுக் கூட்டம் நடந்தது. மாநாட்டில் இருந்த பெண்களைவிட, பொதுக் கூட்டத்துக்கு வந்த பெண்களின் எண்ணிக்கை அதிகம். பொதுக் கூட்டத் தலைவர் தஞ்சை அய். குமாரசாமி, மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கி, பொதுக் கூட்டத்துக்கு தலைமையேற்ற பெரியார் இராமசாமி, செ. முருகப்பா, அய்யாசாமி, தண்டபாணி, பொன்னம்பலனார், லிங்கம், அழகிரிசாமி பேசினார்கள். இரவு 10 மணிக்கு தொடங்கிய கூட்டம் விடியற்காலை 5 மணிக்கு வரை நடந்தது.
- மாநாட்டுக்கு வெளி மாகாணங்களிலிருந்தும் பிரதிநிதிகள் ஏராளமாக வந்திருந்தனர். ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று சிறை சென்றவர்கள் கதர் உடைகளுடனும், காங்கிரஸ் கட்சியின் மிதவாத, தீவிரவாதப் பிரிவினரும் அன்னிபெசன்ட் ஆதரவாளர்கள், ஜஸ்டிஸ் கட்சியினர், பார்ப்பனர்கள், மகமதியர்கள், கிறிஸ்தவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், சைவ சமாஜக்காரர்கள், வைணவ சமயக்காரர்கள், பிரம்மஞான சபையினர், வெள்ளைக்காரர், வெள்ளைக்கார பாதிரியார்கள், பண்டிதர்கள், புராண பிரச்சாரகர்கள், சன்யாசிகள், சாமியார்கள், கோயில் டிரஸ்டிகள், குருமார்கள், அர்ச்சகர்கள், சர்க்கார் அதிகாரிகள், பதவியிலுள்ள மாஜிஸ்திரேட்டுகள், நீதிபதிகள், கலெக்டர்கள், குடியானவர்கள், கூலி வேலை செய்வோர், திருமணமான பெண்கள், விதவைகள், தாசிகள் என்று அனைத்துப் பிரிவினரும் பங்கேற்றார்கள் என்று 'குடிஅரசு' பதிவு செய்கிறது. மாநாட்டுக்கு முன் 'குடிஅரசு' விடுத்த அழைப்பில் "தனிப்பட்ட ஸ்திரீகளும், தங்களை விதவைகள் என்றோ, வேசிகள் என்றோ நினைத்துக் கொண்டிருப்பவர்கள், அவசியம் வரவேண்டும்" என்று 'குடிஅரசு' அழைப்பு விடுத்தது குறிப்பிடத்தக்கதாகும்.
- தென்னிந்தியாவிலேயே இவ்வளவு பெரிய மாநாடு நடந்தது இல்லை என்கிறது, 'குடிஅரசு' பதிவு.

**(செய்திகளுக்கு ஆதாரம்: 'குடிஅரசு' 1929 இதழ்கள்)**

## வினாக்கள்... விடைகள்...!

✦ வாஜ்பாய் ஆட்சித் திட்டங்களையே காங்கிரஸ் பின்பற்றியது என்று மோடியும் மன்மோகன் ஆட்சித் திட்டங்களையே மோடி அமுல்படுத்து கிறார் என்று காங்கிரசாரும் குற்றம் சாட்டு கிறார்கள். **– செய்தி**

எல்லா ஆட்சிகளுமே மக்களுக்கு எதிராகத் திட்டம் போடுவதில் ஒன்றாக நிக்குறோம்னு சொல்றீங்க...

✦ மாட்டுக்கறி சாப்பிட்டாலோ விற்றாலோ 5 ஆண்டு சிறை. **– மராட்டிய அமைச்சரவைஉத்தரவு**

இனிமே, செத்த மாட்டை தூக்கிக்கிட்டுப் போய் அடக்கம் பண்ணும் வேலையையும் அமைச்சர்களே எடுத்துக்குங்க.

✦ பன்றிக் காய்ச்சலுக்கு இந்தியாவில் 1,158 பேர் பலி. **– செய்தி**

உலக 'க்ஷேமத்துக்கு' யாகம் நடத்தும் சங்கராச்சாரிகளே! இதுக்கெல்லாம் யாகம் நடத்த மாட்டேளா?

✦ விவசாயிகள் தற்கொலை 26 சதவீதம் அதிகரித்துள்ளது. **– மத்திய அமைச்சர் குந்தாரியா**

மனிதர்கள் சாவுக்குக்கூட சதவீதக் கணக்குப் போட்டு, அப்புறம் சதவீதத்தைக் கட்டுப்படுத்த நிபுணர் குழுவைப் போடுவீங்க போலிருக்கு! விளங்கிடுவீங்க...!

✦ அதிக அளவில் வரி செலுத்துகிறவர்கள் தாங்களாகவே முன் வந்து தங்களுக்கு மான்யம் எதுவும் வேண்டாம் என்று கூற வேண்டும் என்பதே என் வேண்டுகோள். **– அமெரிக்காவில் ஜெட்லி பேட்டி**

இந்த கோரிக்கையை அமெரிக்கர்களுக்கு வைக்கிறீங்களா? அல்லது இந்தியர்களுக்கா? எதுக்கும் புரியும்படி விளக்கிடுங்க.

✦ தெலுங்கானா முதலமைச்சர், வாஸ்து பண்டிதர் ஒருவரை அரசு ஆலோசகராக நியமித்துள்ளார். **– செய்தி**

வாஸ்துப்படி முதலமைச்சரை உடனே மாத்தனும்னு ஆலோசனை சொன்னா, என்ன செய்வீங்க சார்?

✦ மோடியின் 'சூட்'டை 4.31 கோடிக்கு குஜராத் வைர வியாபாரி ஏலம் எடுத்தார். **– செய்தி**

ஏலம் போனது மோடியின் 'சூட்' அல்ல; அவரது 'எளிமை வேடம்'!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இருப்பேன்' என்று அறிவித்ததையும் சுட்டிக் காட்டி உரையாற்றினார். நாற்காலிகள் முழுதும் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. ஊர் மக்கள் அனைவருமே குடும்பத்துடன் ஆண்களும் பெண்களுமாக திரண்டு வந்து உரைகளை இறுதிவரை ஆர்வத்துடன் கேட்டது குறிப்பிடத்தக்கதாகும். ம.தி.மு.க., தி.மு.க., அ.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், திராவிடர் கழகம் என்று பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்களும் கூட்டத்தில் பங்கேற்று, கழகத் தலைவருக்கு ஆடைகளை அணிவித்து, தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். திராவிடர் கழகத் தோழர்கள் மேடையில் பேசி நன்றி கூறினார்.

ஜாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களில் மக்கள் கட்சிகளை இயக்கங்களை முன்னிறுத்தாமல் ஓரணியில் திரளுவார்கள் என்பதையும், திரட்ட முடியும் என்பதையும் வெளிப்படுத்திய கூட்டமாக இலுப்ப நத்தம் கூட்டம் அமைந்தது.

**– நமது செய்தியாளர்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 12th March 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | மார்ச் 19, 2015 | புரட்சி 14 | முழக்கம் 10 | விலை: ரூ.3.00

# மேலும் பார்ப்பனர்களை திணிக்காதே!




# உயர்நீதிமன்றம் முற்றுகை: 700 தோழர்கள் கைது!

சென்னை உயர்நீதிமன்றத்தில் காலியாக உள்ள 18 நீதிபதிகளுக்கான நியமனங்களில் இதுவரை வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகங்களுக்கு நீதி வழங்கக் கோரி உயர்நீதிமன்றத்தை முற்றுகையிடும் போராட்டம் எழுச்சியுடன் நடந்தது. திராவிடர் விடுதலைக் கழகம் முயற்சித்து பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்து சமூக நீதிக்கான கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்களுடன் தொடர்பு கொண்டு பேசி ஒருங்கிணைத்தார்.

வேல் முருகன் (தமிழக வாழ்வுரிமை கட்சி), திருமாவளவன் (வி.சி.), பாக்கர் (இந்திய தவ்ஹித் ஜமாத்), அப்துல் சமது (தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகம்), வீரலட்சுமி (தமிழர் முன்னேற்றப் படை), மீ.த. பாண்டியன் (தமிழ்நாடு மக்கள் கட்சி), மகேசு (காஞ்சி மக்கள் மன்றம்), செந்தில் (இளந்தமிழகம் இயக்கம்) ஆகிய அமைப்புகளைச் சார்ந்த பொறுப்பாளர்களும் தோழர்களும் பங்கேற்றனர். தந்தை பெரியார் திராவிடர் கழகம், மீனவ மக்கள் முன்னணி, ஆதித் தமிழர் பேரவை, அகில இந்திய கிறிஸ்தவ மக்கள் கழகம், தமிழ்நாடு ஆதிவாசிகள் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளைச் சார்ந்த தோழர்களும், கழக வழக்கறிஞர்கள் துரை. அருண், திருமூர்த்தி, வழக்கறிஞர் ரஜினிகாந்த் (பகுஜன் சமாஜ்) மற்றும் வழக்கறிஞர் சங்கப் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமான வழக்கறிஞர்களும் பங்கேற்றனர்.

பார்ப்பன ஆதிக்கத்தைக் கண்டித்தும், வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகத்தினருக்கு சமூக நீதி வழங்கக் கோரியும், பாரிமுனை மூர் சாலையிலிருந்து தோழர்கள் ஊர்வலமாக புறப்பட்டு உயர்நீதிமன்றம் நோக்கி வந்தனர். நேதாசு சுபாஷ் சந்திர போஸ் சாலை - வழக்கறிஞர் சங்கம் அலுவலகம் அருகே - காவல் துறை, ஊர்வலத்தினரை தடுத்து நிறுத்தி கைது செய்தது. 700க்கும் மேற்பட்ட தோழர்கள் கைதானார்கள். கைதானவர்கள் இராயபுரத்திலுள்ள இரண்டு திருமண மண்டபங்களில் வைக்கப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கைதானது குறிப்பிடத்தக்கது.

திருமண மண்டபத்தில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தலைவர்கள், பார்ப்பன ஆதிக்கம் தலை விரித்தாடுவதைக் கண்டித்தும், பெரியார் கொள்கைகளை தீவிரமாக முன்னெடுக்க வேண்டியது குறித்தும் உரையாற்றினர். மாலை 6 மணியளவில் விடுவிக்கப்பட்டனர்.

போராட்டத்தை விளக்கும் சுவரெழுத்துகளை நீதிமன்றம் இருந்த பகுதிகளைச் சுற்றியும் கடற்கரைச் சாலையிலும் கழகத் தோழர்கள் எழுதியிருந்தனர்.



# வழக்கறிஞர் போராட்டம்: நீதிபதி சந்துருவுக்கு பதில்

உயர்நீதிமன்ற வழக்கறிஞர் போராட்டம் அர்த்தமில்லாதது என்று முன்னாள் நீதிபதி கே.சந்துரு, தமிழ், ஆங்கில 'இந்து' நாளேடுகளில் எழுதிய கட்டுரைகள், அதற்கான வலிமையான மறுப்புகளை முன் வைக்கவில்லை.

காலியாக உள்ள 18 நீதிபதி இடங்களில் இதுவரை வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகப் பிரிவினருக்கும் போதுமான பிரதிநிதித்துவம் இல்லாத பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதே – இப்போது நடக்கும் போராட்டத்தின் நோக்கம்; தமிழ் 'இந்து' கட்டுரையில் அதை நீதிபதி சந்துருவே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"கடந்த பிப்.19ஆம் தேதி தலைமை நீதிபதியை சந்தித்த 'சமூக நீதிக்கான போராட்டக் குழு'வின் அமைப்பாளர்கள் இரண்டு கோரிக்கைகளை முன் வைத்ததாகத் தெரிகிறது. முதல் கோரிக்கை என்னவென்றால், இனி உயர்நீதிமன்ற பதவிகளுக்குப் பரிந்துரைக்கப்படும் நபர்களின் பட்டியலில் பார்ப்பனர், முதலியார், கவுண்டர், பிள்ளை சமூகத்தைச் சார்ந்தவர்கள் இடம்பெறக் கூடாது என்பதே. அவர்களின் இரண்டாவது கோரிக்கை பிரதிநிதித்துவம் பெறாத ஜாதியைச் சார்ந்தவர்கள் இனி நீதிபதிகளாக நியமிக்கப்பட வேண்டும் என்பது" – இப்படி கோரிக்கையை தெளிவாக எழுதத் தொடங்கி, பிறகு கட்டுரை முழுவதிலும் மேற்குறிப்பிட்ட இரண்டு பிரச்சினைகளை தொடாமலேயே பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஒதுக்கீடுகளைப் பற்றியும், இவர்களின் பிரதிநிதித்துவம் கூடுதலாகவே இருப்பதாகவும், புள்ளி விவரங்களை அடுக்குகிறார். போராட்டத்தின் கோரிக்கையோடு எந்தத் தொடர்பும் இல்லாத விளக்கங்களே இவை.

உயர்நீதிமன்றத்தை மய்யமாக வைத்துதான் போராட்டம் நடக்கிறது. ஆனால், நீதிபதி சந்துரு, மாவட்ட நீதிமன்றங்களின் இடஒதுக்கீடுகளை விரிவாக புள்ளி விவரங்களோடு விவரிக்கிறார். உயர்நீதிமன்ற நீதிபதிகள் குறித்து குறிப்பிடும்போது, குறிப்பிட்ட சில ஜாதியினருக்கு கூடுதல் வாய்ப்பு தருவதற்குத்தான் எதிர்ப்பு காட்டப்படுகிறது எனும் பிரச்சினையின் மய்யத்திலிருந்து விலகிப் போய் ஒட்டுமொத்த பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு குறித்தே எழுதுகிறார்.

அடுத்து, உயர்நீதிமன்ற நீதிபதிகளில் பிற்பட்ட பட்டியலினப் பிரிவினர் 85 சதவீதமாகவும், முற்பட்ட வகுப்பினர் 15 சதவீதத்துக்கும் குறைவாகவே இருப்பதாகவும் கவலைப்படுகிறார். முஸ்லிம், கிறிஸ்துவ நீதிபதிகளோ அல்லது உயர்நீதிமன்ற நீதிபதிகளாக இதுவரை நுழைந்திடாத பிரிவினரோ இல்லாமலிருப்பது பற்றி அவர் கண்டு கொள்ளவில்லை. சரி, பார்ப்பன நீதிபதிகள் இப்போது 7 பேர் இருக்கிறார்கள். இப்போது அனுப்பப்பட்ட பட்டியலிலும் பார்ப்பனர் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. சந்துரு அவர்களின் கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஒரு தகவலை கவனத்தில் கொள்ள வேண்டும். 165 மாவட்ட நீதிபதிகளுக்கு எழுத்துப்பூர்வமாக நடத்தப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் ஒருவர் மட்டுமே பார்ப்பனர்.

எழுத்துப்பூர்வ தேர்வில் மாவட்ட நீதிபதியாக ஒரே ஒரு பார்ப்பனர்தான் வர முடிந்திருந்திருக்கிறது. ஆனால் உயர்நீதிமன்ற நீதிபதிகளாக 7 பார்ப்பனர்கள் இருக்க முடிகிறது. இது முன்னேறிய சமூகத்துக்கு எப்படி அநீதியாகும்? மாவட்ட நீதிபதிகளுக்கான தேர்வில் தேர்ச்சி பெறாத ஒருவர், இப்போது உயர்நீதிமன்ற நீதிபதியாகவே இருக்கிறார் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

இது தொடர்பாக இரண்டு வரலாற்று நிகழ்வுகளை சுட்டிக்காட்டலாம்.

கே.ஆர். நாராயணன், குடியரசுத் தலைவராக இருந்தபோது, அவரது ஒப்புதலுக்காக உச்சநீதிமன்றத்துக்கான நீதிபதிகள் பட்டியல் வந்தபோது, விளக்கம் கேட்டு கே.ஆர்.நாராயணன் திருப்பி அனுப்பினார். "தலித், பெண்கள், சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் தரப்படாதது ஏன்?" என்பதுதான் அவர் கேட்ட விளக்கம். "உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளுக்கு இடஒதுக்கீடு இல்லை" என்று தலைமை நீதிபதி பதில் தந்தார். "அது எனக்கும் தெரியும்; நான் இடஒதுக்கீடு பற்றிக் குறிப்பிடவில்லை; பல்வேறு சமூகப் பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் தரப்படாததையே சுட்டிக் காட்டுகிறேன்" என்று பதிலளித்தார் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன்.

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி பட்டியலில் பார்ப்பனர்கள் அதிக எண்ணிக்கையில் இடம் பெற்றிருந்தபோது, தமிழக அரசு எதிர்த்தது. சட்ட அமைச்சராக இருந்த பொன்னையன், 'தமிழக மண்ணின் உளவியலுக்கு (Soil psychology) இது எதிரானது' என்றார். பிறகு பட்டியல் திருத்தப்பட்டது. மூத்த வழக்கறிஞர் காந்தி, 2014இல் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் பி.எஸ்.சவுகான், ஜெ. செலமேசுவர், எம்.ஒய். இக்பால், அமர்வு நீதிபதிகள் நியமனம் தொடர்பாக வழங்கிய தீர்ப்பில் இவ்வாறு குறிப்பிட்டனர்:

"Appointments cannot be exclusively made from any isolated group nor should it be pre-dominated by representing a narrow group."

"ஒரு குறிப்பிட்ட குழுவிலிருந்து மட்டுமோ அல்லது ஒரு சிறு குழுவுக்கு ஆதிக்கம் செலுத்தக் கூடிய எண்ணிக்கையிலோ நியமனங்கள் இருக்கக் கூடாது" – என்பதே உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு. அந்த அடிப்படையில்தான் ஏற்கெனவே பிரதிநிதித்துவம் பெற்றுள்ள பார்ப்பனர், முதலியார், கவுண்டர், பிள்ளை ஜாதியினருக்கு மீண்டும் வாய்ப்புகள் தரக்கூடாது என்கிறது சமூகநீதி போராட்டக் குழு. இதில் என்ன தவறு? இப்போது போராடுவது, வழக்கறிஞர்கள் மட்டுமல்ல; சமூகநீதி கோரும் இயக்கங்களும்தான். நீதிபதி சந்துருவின் எதிர்ப்புக் கட்டுரையில் எந்த நியாயமும் இல்லை.

**– விடுதலை இராசேந்திரன்**

# முற்றுகைப் போராட்டம் ஏன்?

- சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் மூத்த மூன்று நீதிபதிகள் (கொலிஜியம்) தேர்ந்தெடுக்கும் முறையே உள்ளது. அதில் மூத்த நீதிபதிகள் இருவர் எப்போதும் பார்ப்பனர்களாகவும், பிற மாநிலத்தவர்களாகவுமே உள்ளனர். உயர்நீதிமன்ற நீதிபதிகள் பதவிக்கு மாவட்ட நீதிபதி பதவி வரை உள்ளது போல எழுத்துத் தேர்வோ, மூத்த வழக்கறிஞர்கள் நியமனத்திற்கு உள்ளதுபோல தகுதி வரையறைகளோ ஏதும் இல்லை. அதனால் தான் சில ஆண்டுகளுக்கு முன்பு மாவட்ட நீதிபதிகள் தேர்வில் தோல்வி அடைந்த ஒருவர் அதே ஆண்டில் உயர்நீதிமன்ற நீதிபதி ஆக முடிந்தது.
- தற்போது சென்னை உயர்நீதிமன்றத்தில் மொத்தமுள்ள 60 நீதிபதி பணி இடங்களில் காலியாகவுள்ள 18 பணி இடங்களுக்கு நடைபெறும் தேர்வில், பார்ப்பனர்களுக்கும் ஏற்கெனவே பிரதிநிதித்துவம் பெற்றுள்ள உயர்பிரிவினருக்குமே மீண்டும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் 18 பணியிடங்களை ஒரே முறையில் நிரப்பாமல், இரண்டு கட்டங்களாக நிரப்பி, மேலும் பார்ப்பனர்களை நியமனம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- உச்சநீதிமன்றம்கூட, நீதிபதி நியமனங்களில் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்காத சமூகத்தினருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று (ஆர். காந்தி, எதிர் இந்திய அரசு என்ற வழக்கில்) எடுத்துக் கூறி அனைத்து உயர்நீதிமன்றங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அருந்ததியர், மீனவர், யாதவர், வன்னியர், பொற்கொல்லர், குயவர், வண்ணார், நாவிதர், பழங்குடியர், ஆச்சாரி, சிறுபான்மையினர் மற்றும் பெண்கள் போன்ற எத்தனையோ சமூகப் பிரிவினர் இதுவரை உயர்நீதிமன்ற நீதிபதிகளாக வரமுடியாத/இல்லாத நிலையைக் கருத்தில் கொண்டு வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகப் பிரிவினருக்கு வாய்ப்பு தரப்பட வேண்டும் என்று இக்கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.
- ஏற்கெனவே தலைமை நீதிபதி, இரண்டாவது நிலையில் உள்ள நீதிபதிகள் உள்பட 7 பேர் பார்ப்பனர்களாக இருக்கும் நிலையில் மேலும் பார்ப்பனர்களையே நியமிப்பது சமூக நீதிக்கு எதிரானதாகும். நீதிபதிகள் நியமனத்தில் பார்ப்பனர்கள் 50 வயதுக்குள்ளாகவும், பார்ப்பனரல்லாதார் 50 வயதுக்கு மேல் உள்ளவர்களாகவும் நியமிக்கின்றனர். இத்தகைய முறை பார்ப்பன நீதிபதிகளை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி வரை பதவி உயர்வு பெறச் செய்வதற்கும், பிற்காலத்தில் நீதிபதிகளை நியமனம் செய்யும் உச்சநீதிமன்ற கொலிஜியத்திலும் இடம்பெறச் செய்வதற்குமான திட்டமிட்ட சமூக மோசடியேயன்றி வேறில்லை.
- இத்தேர்வுக்கெதிராக வழக்கறிஞர்கள் சங்கம் தொடுத்த வழக்குகூட மரபுக்கு மாறாக முன்னரே நடந்த பேச்சு வார்த்தையின்போது பட்டியலை நியாயப்படுத்தியும் வழக்கறிஞர்கள் தங்களது போராட்டத்தையும், வழக்கையும் திரும்பப் பெற வேண்டுமென்று பேசியவரும், இளையவருமான ஒரு பார்ப்பன நீதிபதியிடமே விசாரணைக்கு வருகிறது. வேறு அமர்விற்கு மாற்றக் கோரினாலும் தலைமை நீதிபதியும் மறுக்கிறார். பொது நீதிக்கும், அற நெறிக்கும் எதிராக இவ்வழக்கை நடத்துகிறார்கள் என்ற கேவல நிலையே நிலவுகிறது.
- உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் மூன்றில் ஒரு பங்கினர் மாவட்ட நீதிபதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். அதில் 4ஆவது இடத்திலுள்ள சிறுபான்மை சமுதாயத்தினர் ஒருவரை தவிர்ப்பதற்காகவே 9 பேர் பட்டியல் மட்டுமே தயாரித்துள்ளனர். அவரது பதவி ஓய்வுக்காகவும், தாங்கள் விரும்பும் பார்ப்பன பெண்ணுக்கு 45 வயது நிறைவடைவதற்காகவும் காத்திருக்கின்றனர்.
- சமூக நீதிக்கு முன்னோடியாக உள்ள தமிழ்நாட்டில் 150 ஆண்டுகளாக சென்னை உயர்நீதிமன்றத்தில் பார்ப்பனர்களும், உயர் பிரிவினருமே நீதிபதிகளாக அதிக எண்ணிக்கையில் இருந்து வரும் நிலையில் இன்றுவரை வாய்ப்பு மறுக்கப்பட்டு வரும் சமூகப் பிரிவினருக்கும், உரிய பிரதிநிதித்துவம் இல்லாத சிறுபான்மையினர் போன்றோரும் நீதிபதிகள் நியமனத்தில் வாய்ப்களிக்க வேண்டும் என்று சமூகநீதிக்கான கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

# சிறைச் சென்ற கழக மாணவர் பிணையில் விடுதலை

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே உள்ள கூதாம்பி கிராமத்தில் கூட்டுறவு பால் சொசைட்டியில் தலித் மக்கள் மீது கடைபிடிக்கப்பட்டு வந்த தீண்டாமை வன்கொடுமைக்கு எதிராக குரல் கொடுத்த ஈரோடு CNC கல்லூரி மாணவரும் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழருமான கூதாம்பி மூர்த்தி மீது ஜாதி வெறியர்களால் காவல் துறை துணையோடு பொய்யாக புனையப்பட்ட கொலை மிரட்டல் வழக்கில் 14.03.2015 அன்று பெருந்துறை நீதிமன்றத்தில் பிணை வழங்கப்பட்டது. 15.03.2015 அன்று காலை 10.30 மணிக்கு பிணையில் வெளிவந்த தோழர் மூர்த்திக்கு திராவிடர் விடுதலைக் கழக பொள்ளாச்சி மாவட்டத் தலைவர் விஜயராகவன் தலைமையில் கோபி, திருப்பூர், பல்லடம், கரூர், ஈரோடு, குமராபாளையம், பொள்ளாச்சி தோழர்கள் மற்றும் த.பெ.தி.க, ஆதித்தமிழர் பேரவைத் தோழர்கள் என சுமார் 40 பேருடன் பொள்ளாச்சி கிளை சிறை முன்பு வாழ்த்தொலி முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கிருந்து புறப்பட்டு பல்லடம் சமத்துவபுரத்தில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள், இராம.இளங்கோவன், பல்லடம் விஜயன் முன்னிலையில் மாலை அணிவித்து தோழர் மூர்த்தி மரியாதை செய்தார். தோழர் பல்லடம் விஜயன் சார்பில் அனைவருக்கும் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. பல்லடத்தில் இருந்து புறப்பட்டு மாலை சுமார் 3 மணிக்கு கூதாம்பியில் ஈரோடு மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி தலைமையில் தோழர் மூர்த்திக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது தோழர்கள் அனைவருக்கும் கூதாம்பி அருச்சுணன், துரை ஆகியோர் சார்பில் சிற்றூண்டி, பழச்சாறு வழங்கப்பட்டது.

### கூடங்குளத்தில் “அணு உலைப் பூங்கா” அமைக்காதே!

# சென்னையில் நடந்த முழு நாள் கருத்தரங்கு





இந்திய அரசே! கூடங்குளத்தில் அணு உலைப் பூங்கா அமைக்காதே, இந்திய அமெரிக்க அணு சக்தி ஒப்பந்தத்தை ரத்து செய், கூடங்குளத்தில் 3, 4 அணு உலைகளுக்கான ஒப்பந்தத்தை ரத்து செய், தமிழகத்தை அணுக்கழிவுக் கூடமாக்காதே ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி 14-03-2015 சனிக்கிழமை அன்று சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள சந்திர சேகர் திருமண மண்டபத்தில் நடந்த முழு நாள் கருத்தரங்கத்தின் செய்திச் சுருக்கம்.

காலை அமர்வு சுமார் 11 மணி அளவில் தொடங்கியது. அமர்வுக்கு மக்கள் சிவில் உரிமைக் கழகத் தோழர் கண. குறிஞ்சி தலைமை தாங்கினார். இவ்வரங்கில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் தோழர் சீமான், தமிழக மக்கள் ஜனநாயக கட்சி தலைவர் கே.எம்.செரீஃப், தமிழ்த் தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளர் வெங்கட்ராமன், தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர் அண்ணாமலை, திராவிட இயக்கத் தமிழர் பேரவை சிற்பி செல்வராஜ், ஆதித் தமிழர் பேரவை ஆனந்தன், தமிழ்த் தேச மக்கள் கட்சி பொதுச் செயலாளர் தமிழ்நேயன், இளந் தமிழகம் இயக்கத்தின் ஒருங்கிணைப் பாளர் செந்தில், தமிழ்த் தேசக் குடியரசு இயக்கத்தின் பொதுச் செயலாளர் செந்தமிழ்வாணன், காஞ்சி மக்கள் மன்றத் தோழர் மேகலா ஆகியோர் உரையாற்றினர். மேலும், மாலை அமர்வில் பேச இருந்த மார்க்சிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் அ. சௌந்தரராஜன் காலை அமர்வில் பேசினார். சரியாக 1.30 மணி அளவில் முதல் அமர்வு முடிந்தது.

மதிய உணவுக்குப் பின் பிற்பகல் அமர்வு 2.15 மணி அளவில் தொடங்கியது. இவ்வமர்வுக்கு தமிழக மக்கள் புரட்சிக் கழகப் பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன் தலைமை தாங்கினார். இவ்வமர்வில் தாளாண்மை உழவர் இயக்க அமைப்பாளர் திரு நாவுக்கரசு, தமிழ்ப் புலிகள் இயக்கத் தலைவர் நாகை திருவள்ளுவன், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் வே. பாரதி, 21 ஆம் நூற்றாண்டின் மக்கள் இணையம் அமைப்பு தலைவர் ஆழி செந்தில் நாதன், தலித் மக்கள் கட்சித் தலைவர் செங்கோட்டையன், கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டக் குழு தோழர் முகிலன், ஓசை அமைப்பு தலைவர் காளிதாசன், தமிழர் முன்னணி தலைவர் ஜெயப்பிரகாஷ், புரட்சிகர மக்கள் பாசறை தலைவர் காலன்துரை, தமிழ்நாடு இயற்கை வாழ்வுரிமைப் பாதுகாப்பு இயக்கத் தலைவர் பொடாரன், தற்சார்பு விவசாயிகள் சங்க தலைவர் கி.வே. பொன்னையன், பூவுலகின் நண்பர்கள் தோழர் வெற்றிச்செல்வன், மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி இரா. பச்சைமலை ஆகியோர் உரையாற்றினர். மாலை 5.30 மணி அளவில் இவ்வமர்வு நிறைவடைந்தது.

அதை தொடர்ந்து மாலை அமர்வு தொடங்கியது. இவ்வமர்வுக்கு கூட்டமைப்பின் ஒருங்கிணைப் பாளரும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவருமான கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். இவ்வமர்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசியக் குழு உறுப்பினர் மு.வீரபாண்டியன், எஸ்.டி.பி.ஐ. தலைவர் தெகலான் பாகவி, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அப்துல் சமது, தமிழ்நாடு மக்கள் கட்சித் தலைவர் மீ.த. பாண்டியன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாநில அமைப்புச் செயலாளர் கொற்றவ மூர்த்தி, சி.பி.ஐ. (எம்-எல்), விடுதலை மாநிலக் கமிட்டி உறுப்பினர் ஜவஹர், அணு சக்தி எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் சுப. உதயகுமார் ஆகியோர் உரையாற்றினர்.

கருத்தரங்கத்தின் முடிவில் அதில் பங்குபெற்ற அனைத்து கட்சிகள், அமைப்புகளின் சார்பாக பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இந்தியாவின் வளர்ச்சிக்காக, தூய்மையான ஆற்றல் (Clean energy) என்று இந்திய அரசும், சிவில் தேவைகளுக்கான அணுசக்தி புரிந்துணர்வு என்று அமெரிக்க அரசும் சொல்லிக் கொண்டு இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் போட்டப் பட்டது. ‘உலகத்தரம் வாய்ந்த பாதுகாப்பான தொழில்நுட்பம்’ என்று வாதிடும் அரசுகள் அணு விபத்து இழப்பீட்டுக்குப் பொறுப்பேற்க இன்றும் மறுத்து வருகின்றன.

   இந்நிலையில், இந்திய அரசு இயற்றியுள்ள அணு விபத்து இழப்பீட்டுச் சட்டமோ சுமார் 1500 கோடி ரூபாய்க்கு மட்டுமே அணு உலைக்குப் பாகங்கள் வழங்கிய நிறுவனங்களைப் பொறுப்பேற்கச் சொல்கின்றது. உண்மையில் இவ்வொப்பந்தம் என்பது G.E. Wesntighouse போன்ற பன்னாட்டு பெருநிறுவனங்களின் இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு மக்களின் பாதுகாப்பை அணு ஆபத்துக்கு அடகு வைக்கும் ஒப்பந்தமே. எனவே, அமெரிக்க இந்திய அணுசக்தி ஒப்பந்தத்தை இரத்து செய்யுமாறு இக்கருத்தரங்கத்தின் வாயிலாக வலியுறுத்துகிறோம்.

2. கூடங்குளத்தில் முதல் இரண்டு அணு உலைகள் அமைப்பதற்கு எதிரான வலுவான மக்கள் போராட்டம் நடந்திருக்கும் நிலையில் 3,4 அணு உலைகளை 40,000 கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்காக இரசியாவுடன் ஒப்பந்தம் போட்டுள்ளது இந்திய அரசு. 3,4,5,6 என்று அடுத்தடுத்து அணு உலைகளை நிறுவி அணு உலைப் பூங்கா அமைக்க நினைக்கிறது இந்திய அரசு. அணு உலைப் பூங்காக்களில் போர், பயங்கரவாதிகளின் தாக்குதல், சுனாமி போன்ற இயற்கைப் பேரிடர் ஆகியவற்றால் பேராபத்து நிகழும் என்பதற்கான அண்மைகால சாட்சியாக புகுசிமா அணு உலை விபத்து அமைந்துள்ளது. எனவே, கூடங்குளத்தில் 3,4 அணு உலைகள் அமைப்பதற்காக இரசியாவுடன் போட்டுள்ள ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டும் என்றும் இக் கருத்தரங்கின் வாயிலாக இந்திய அரசைக் கோருகிறோம்.

3. அணு உலை செயல்பட்டால் உண்டாகும் அணுக் கழிவு பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் ஆபத்தான கதிரியக்கத்தை வெளிப்படுத்தும் தன்மை கொண்டது. இத்தகைய அணுக் கழிவை எங்கே, எவ்வாறு பாதுகாக்கப் போகிறது? என்ற உண்மையை இதுவரை வெளிப் படுத்தாமல் முடி மறைத்துக் கொண்டிருக்கிறது இந்திய அரசு. தமிழகத்தில் அணு உலைப் பூங்காவை அமைப்பது, அணுக்கழிவுகளை எங்கே வைக்கப் போகிறோம்? என்று இதுவரை சரியாக விளக்காதது. இவற்றைக் கொண்டு பார்க்கும் போது இந்திய அரசு நமது தமிழகத்தை அணுக் கழிவு கூடமாக்க முயற்சிப்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இம்முயற்சியை இந்திய அரசு கைவிட வேண்டும் என்று இக் கருத்தரங்கத்தின் வாயிலாக கேட்டுக் கொள்கிறோம்.

கூடங்குளத்தில் அணு உலைப் பூங்கா அமைக்காதே என்ற கோரிக்கையைத் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளும் ஆதரிக்கின்றன. இதை இந்திய அரசு புறந்தள்ளிவிடக் கூடாது என்று எச்சரிக்கும் வண்ணத்தில் இக்கருத்தரங்கம் நடந்து முடிந்தது.

### ‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்!’

## சேலம் பரப்புரைக்குழு மார்ச் 21இல் பயணம் தொடங்குகிறது

‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’ என்ற முழக்கத்தை முன் வைத்து திராவிடர் விடுதலைக் கழகம் பரப்புரைப் பயணங்களை தொடங்குகிறது. சென்னையில் ஒரு குழு மார்ச் 20ஆம் தேதியும், ஈரோட்டில் ஒரு குழு அதே நாளிலும் பயணம் தொடங்குகிறது. மயிலாடுதுறையிலிருந்து ஒரு குழு 22ஆம் தேதி பயணத்தைத் தொடங்குகிறது. சேலத்திலிருந்து 21ஆம் தேதி ஒரு குழு பயணத்தைத் தொடங்குகிறது. பயணத்தின் தொடக்க விழா பொதுக் கூட்டம் மார்ச் 21ஆம் தேதி மாலை தாரமங்கலத்தில் நடக்கிறது. சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரிய குமார் தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றுகிறார். பயணத் திட்டம் கீழ்க்கண்டவாறு வகுக்கப்பட்டுள்ளது.

மார்ச் 22 – நங்கவள்ளி; 23 – மேட்டூர் ஆர்.எஸ்; 24 - மேட்டூர் அணை; 25 – கொளத்தூர்; 26 – சேலம் மாநகர்; 27 - இளம்பிள்ளை; 28 - ஆத்தூர்; 29 - ஏற்காடு; (நாமக்கல் மாவட்ட பயணத் திட்டம் பின்னர் அறிவிக்கப் படும்) தலைமைக் குழு உறுப்பினர் மேட்டூர் சக்தி இத் தகவல்களை தெரிவித்துள்ளார்.


**வெளி வந்து விட்டது**

**கழகத்தின் வெளியீடுகள்**

**“இவர்தான் பெரியார்”**
**வரலாற்றுச் சுருக்கம் – ஆண்டுவாரியாக**
**தொகுப்பு: தஞ்சை மருதவாணன்**
விலை : ரூ.20

**1912லிருந்து 1973வரை திராவிடர் இயக்க வரலாற்றுச் சுவடுகள்**
**தொகுப்பு: தஞ்சை மருதவாணன்**
விலை : ரூ.30

**“ஈழம் முதல் அணு உலை வரை...”**
**சமகாலப் பிரச்சினைகளில் பெரியாரியல் பார்வை!**
**கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் ‘இமயம்’, ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சிப் பேட்டிகள்**
விலை : ரூ.30

**“பண்பாடு–சமூகம்–அரசியலில் ‘மநு’வின் ஆதிக்கம்”**
**கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன்**
விலை : ரூ.10

பரப்புரைப் பயணத்துக்காக இந்த நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தோழர்கள் தலைமைக்குழு உறுப்பினர் **தபசி குமரனை** தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தொடர்பு எண்: 9941759641**

DATE OF PUBLICATION 19.03.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# ஜாதி மதவாதத்துக்கு எதிராக ‘சரிநிகர்’ அமைப்பு உதயம்



பண்பாட்டுத் தளத்தில் அதிகரித்து வரும் வன்முறைகளுக்கு எதிரான விரிந்த மேடை ஒன்று உருவாக்கப்பட்டு, அதற்கு ‘சரிநிகர்’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. மதம், சாதியத்துக்கு எதிராக, தமிழக பண்பாட்டு வரலாற்றின் முற் போக்கான பாரம்பர்யத்தை வலுவுடன் முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டு, ‘சரிநிகர்’ செயல்படும். இது தவிர, மொழி சமத்துவம், பெண் சமத்துவம் ஆகியவற்றையும் வலி யுறுத்தி புத்தகங்கள், ஒலிப் பேழைகள், குறும்படங்கள், உரைகள், நாடகங்கள், பிற கலை வடிவங்கள், கருத்தரங்குகள், சமூக வலைத் தள செயல்பாடுகள் என பன்முகப்பட்ட வடிவங்களில் சரிநிகர் பயணிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சரிநிகர் தொடக்க நிகழ்வு மார்ச் 5ஆம் தேதி மாலை 5.30 மணியளவில் எழும்பூர் இக்ஷா அரங்கில் நிகழ்ந்தது. பேராசிரியர் அருணன் தலைமையில் எஸ்.ரவிக்குமார், அ.மார்க்ஸ், மனுஷ்ய புத்திரன், முனைவர் அரசு, வழக்குரைஞர் அருள்மொழி, ஓவியா, பூவுலகின் நண்பாகள் சுந்தர்ராசன், விடுதலை இராசேந்திரன், ஆழி. செந்தில்நாதன், எழுத்தாளர் ஜவஹர் உரையாற்றினார்கள். எழுத்தாளர் ச. தமிழ்ச் செல்வன் ஒருங்கிணைத்தார்.

விடுதலை இராசேந்திரன் தமது உரையில், “வேத ஆரியப் பண்பாடே, வெகு மக்கள் மீது இந்துப் பண்பாடாக திணிக்கப்படுகிறது என்ற வரலாற்று உண்மையை மக்களிடம் எடுத்துக் காட்டி வெகு மக்களை சங்பரிவார் வலையில் விழாமல் தனிமைப்படுத்த வேண்டும், ஒடுக்கப்பட்ட இந்து மக்களுக்கான இடஒதுக்கீடு, ஜாதி ஒடுக்குமுறை, தீண்டாமை கோயில் நுழைவு போன்ற உரிமைகளைத் தடுத்து எதிர்த்தவர்கள். ‘இந்து’ மதத்துக்கு உரிமை கோரும் பார்ப்பன சங் பரிவாரங்கள்தான். மாறாக இந்த உரிமைகளுக்காக மதத்தை ஏற்க மறுத்தாலும் மக்கள் உரிமைப் பார்வையில் இந்து மக்களுக்காக போராடுவோர் மத மறுப்பாளர்கள் தான் என்ற உண்மை களை எடுத்துரைக்க வேண்டும். மோடி ஆட்சியின் சமஸ்கிருதத் திணிப்பை எதிர்க்கும், அதேபோழ்து, தமிழர் சமுதாயத்தில் வாழ்வியலில் பெயர் சூட்டல், திருமணம், வழிபாடு, குடமுழுக்கு, சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு, இல்லத் திறப்பு, திதி கொடுப்பது வரை புரோகிதப் பார்ப் பனர்களைக் கொண்டு சமஸ்கிருதப் பண் பாட்டையே வாழ்க்கைப் பண் பாடாக மாறியிருக்கும். பண்பாட்டுத் திணிப்புகளை மக்களிடம் சரிநிகர் எடுத்துச் சொல்லி விளக்கிட வேண் டும். அப்போதுதான் சமஸ்கிருத எதிர்ப்புக்கான இயக்கம் முழுமை பெறும்” என்று சுட்டிக் காட்டினார்.

அரங்கம் முழுதும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

தாலி குறித்து ‘புதிய தலைமுறை’ ஒளிபரப்ப இருந்த விவாத நிகழ்ச்சியை மதவெறி சக்திகள் மிரட்டலை யொட்டி நிறுத்திவிட்டது. அந்த நிகழ்ச்சியை ஒளிபரப்ப வற்புறுத்தி, மார்ச் 14ஆம் தேதி ‘புதிய தலைமுறை’ நிர்வாக இயக்குனரிடம், ‘சரிநிகர்’ சார்பாக மனு அளிக்கப்பட்டது. தமிழ்ச் செல்வன், அருணன், குமரேசன், வழக்கறிஞர் அருள்மொழி, ஓவியா உள்ளிட்ட தோழர்கள் நிகழ்வில் பங்கேற்றனர்.

# ஜலகண்டபுரத்தில் எழுச்சியுடன் கழகக் கூட்டம்






27.02.15 அன்று மாலை 6.30 மணிக்கு திராவிடர் விடுதலைக் கழக நங்கவள்ளி கிளை கழக சார்பில் ஜலகண்டாபுரம் பேருந்து நிலையத்தில் பெரியார் கொள்கை விளக்க பொதுகூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தோழர் பொ. கிருட்டிணன் தலைமை தாங்கினார். தோழர் இராஜேந்திரன் வரவேற்று பேசினார். முன்னதாக மேட்டூர் டி.கே.ஆர். இசை குழுவினரின் இசை நிகழ்ச்சியை தொடர்ந்து காவை. இளவரசனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து தோழர் நங்கவள்ளி அன்பு, கோபி.வேலுசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். தோழர் உமாசங்கர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

## பரப்புரைப் பயணம்: சென்னை மாவட்டம் தயாராகிறது

சென்னை மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் 6.3.2015 மாலை 7 மணியளவில் கழகத் தலைமை நிலையத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடந்தது. மாவட்ட செயலாளர் உமாபதி வரவேற்று, வரவு செலவு கணக்குகளை சமர்ப்பித்தார். மாவட்டக் கழகம் தொடர்ச்சியாக களப்பணியில் இறங்கியிருப்பதை சுட்டிக்காட்டினார். பொதுச் செயலாளர், பெரியார் வலியுறுத்திய பார்ப்பனிய ஜாதி-மத எதிர்ப்பு கொள்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு பல்வேறு இயக்கங்கள் வந்து சேர்ந்துள்ளதையும் பெரியார் இயக்கத்தின் கடமைகளும் பொறுப்புகளும் மேலும் கூடியிருப்பதையும் விரிவாக விளக்கினார். பரப்புரை இயக்கத்துக்கான செயல் திட்டங்கள், ஏற்பாடுகள் குறித்தும், மக்களை அணுகும் முறைகள் குறித்தும் விரிவாக கருத்துகளை முன் வைத்தார். தொடர்ந்து கழகத் தோழர்கள் ஏசு, பாஸ்கர், தட்சிணாமூர்த்தி, சைதை சிவா, வழக்கறிஞர்கள் அருண், திருமூர்த்தி, தபசி குமரன், மாணவரணி அமைப்பாளர் அசுரன் உள்ளிட்ட பலரும் உரையாற்றினர். சென்னை மாவட்டக் கழகம் மீண்டும் வடசென்னை, தென்சென்னை என இரண்டாகப் பிரிக்கப்பட்டு, புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

புதிய பொறுப்பாளர்கள்: தென் சென்னை மாவட்டத் தலைவர் : வேழ வேந்தன்; செயலாளர் : இரா. உமாபதி; அமைப்பாளர் - ஜான் மண்டேலா; இளைஞரணி அமைப்பாளர் - நாத்திகன்; மாணவரணி அமைப்பாளர் - அசுரன்

வடசென்னை மாவட்டத் தலைவர் - ஏசு குமார்; செயலாளர் - நா. பாஸ்கர்; அமைப்பாளர் - தட்சணாமூர்த்தி; துணைத் தலைவர் - நாகேந்திரன்; துணைச் செயலாளர் - விஜயன்; இளைஞரணி அமைப்பாளர் - துரை.

பரப்புரை பயணம் குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டது. இனி மாதந்தோறும் தலைமை நிலையத்தில் சிந்தனை வட்ட கூட்டங்கள் நடத்த முடிவு செய்யப்பட்டது.

**ஆசிரியருக்குக் கடிதம்**

### கழகத் தலைவரின் தெளிவான விளக்கங்கள்

கருத்துக்களை மக்களிடையே கொண்டு செல்கின்ற பண்பாட்டு மாற்றத்திற்கான போராட்டத்தின் கருவிகளாக கொள்கை பலத்தோடு ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வந்து கொண்டிருக்கிறது.


பிப்ரவரி 26.22015 அன்று வெளி வந்த ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் கொள்கை வலிமையோடு ‘பெரி யாரின் போர்வாளாக’ கழகத் தலைவர் ‘இமயம்’ தொலைக்காட்சிக்கு அளித்த நேர்முகம் நிகழ்ச்சியில் பல்வேறு சிக்கல்களுக்கும் செய்திகளுக்கும் தெளிவாகவும் விளக்கமாகவும் பதில் கூறியிருந்தார். அறிஞர்களுக்கும் அரசியல் ஆய்வாளர்களுக்கும் பாமர மக்களுக்கும் கழகத் தோழர்களுக்கும் தெளிவான விளக்கமாக இருந்தது.

– விசுவநாதன் (விசு), சேலம்

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 20th March 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | மார்ச் 26, 2015 | புரட்சி 14 | முழக்கம் 11 | விலை: ரூ.3.00


## சென்னை – ஈரோடு – தாரமங்கலம் – மயிலாடுதுறையிலிருந்து





# பரப்புரைப் பயணங்கள் தொடங்கின

சென்னை மண்டல திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், ‘பறி போகிறது எங்கள் நிலம்; கொள்ளை போகிறது கனிம வளம்; ஒழிகிறது வேலை வாய்ப்பு; ஓங்கி வளர்கிறது ஜாதி வெறி; எனவே எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்” என்று 20.3.2015 முதல் 31.3.2015 வரை 11 நாள் பரப்புரைப் பயணம் தொடங்கியுள்ளது. பயண தொடக்கக் கூட்டம், சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 20.3.2015 மாலை 5 மணியளவில் சென்னை பெரம்பூர் வீனஸ் மார்க்கெட், காந்தி சிலை அருகில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நா. பாஸ்கர் தலைமை வகிக்க, தோழர்கள் ஏசு குமார், துரை முனுசாமி, நாகேந்திரன் முன்னிலை வகித்தனர் தட்சணாமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். வழக்கறிஞர்கள் துரை அருண், திருமூர்த்தி, மாவட்டச் செயலாளர் உமாபதி, எழுத்தாளர் வே. மதிமாறன் உரையைத் தொடர்ந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி பரப்புரைப் பயணத்தைத் தொடங்கி வைத்து, சிறப்புரை யாற்றினார்.


முன்னதாக, சம்பூகன் கலைக் குழுவினர் நாத்திகன், அசுரன் ஆகியோர் பகுத்தறிவு-ஜாதி ஒழிப்புப் பாடல்களை பாடினர். தொடர்ந்து சிற்பி இராஜனின் ‘மந்திரமல்ல! தந்திரமே!’ என்ற அறிவியல் நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியாக விஜயன் நன்றி கூறினார்.

### ஈரோட்டில்...

‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’ பரப்புரைப் பயணத்தின் தொடக்க விழா பொதுச் கூட்டம் 23.3.2015 வெள்ளி மாலை ஈரோடு ‘அக்ரகார’த்தில் பெருமாள் வாத்தியார் நினைவு மேடையில் சிறப்புடன் நடைபெற்றது. ஈரோடு கழக தெற்கு மாவட்டச் செயலாளர் கு.சண்முகப் பிரியன் தலைமையில் அமைப்பாளர் ப.குமார், வடக்கு மாவட்ட தலைவர் - நாத்திக ஜோதி, தலைமைக்குழு உறுப்பினர் ப. இரத்தினசாமி ஆகியோர் உரையைத் தொடர்ந்து, தலைமைக் கழக பேச்சாளர் கோபி. வேலுச்சாமி, மூடநம்பிக்கைகளை தோலுரித்துப் பேசினார். நிறைவாக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பயணத்தின் நோக்கங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். முன்னதாக கா.வை.இளவரசன், ‘மந்திரமல்ல; தந்திரமே’ நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினார். பொது மக்கள் ஏராளமாக திரண்டு வந்திருந்து இறுதிவரை கருத்துகளைக் கேட்டனர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுப்ரமணி, கொள்கை விளக்கப் பாடல்களைப் பாடினார். கழக மாணவர் இந்திரப் பிரியன், ‘ஜாதி எதிர்ப்புக் கவிதை வாசித்தார். நகர துணைத் தலைவர் சத்தியமூர்த்தி நன்றி கூறினார். கழக ஏட்டுக்கு 50 சந்தாக்களுக்கான தொகை ரூ.10,000/- பொதுச் செயலாளரிடம் தோழர்கள் வழங்கினர்.

கழகத்தின் புதிய வெளியீடுகளை தோழர் இரத்தினசாமி, கூட்டத்தில் அறிமுகம் செய்தார். மறைந்த கழகச் செயல்வீரர் பெருமாள் வாத்தியார் இல்லத்தில் அவரது மகன் இலட்சுமணன் தோழர்களுக்கு இரவு உணவு வழங்கினார். 21ஆம் தேதி தொடங்கி, 24ஆம் தேதி வரை ஈரோட்டில் பரப்புரைக் கூட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. காலை 7 மணி, மாலை 4 மணி, இரவு 7 மணி என்று ஒவ்வொரு நாளும் மூன்று கூட்டங்கள் திட்டமிடப்

(4 ஆம் பக்கம்)





**தலையங்கம்**

# தமிழகத்தில் ஜாதி வெறிக் கொலைகள்!

ஜாதி எதிர்ப்புக் கருத்துகளை மக்களிடையே பரப்ப திராவிடர் விடுதலைக் கழகம், ‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’ என்ற முழக்கத்தை முன் வைத்து பரப்புரை இயக்கங்களைத் தொடங்கியிருக்கிறது. சமூகத்தின் அனைத்து பிரச்சினைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் மய்யமாக ஜாதியமைப்பே இருக்கிறது. அதற்குள் வெடித்துக் கிளம்பும் முரண்பாடுகளே ஜாதியக் கலவரங்களுக்குக் காரணம். இந்த ஜாதியமைப்புக்கான கருத்தியலை வழங்கி, ‘புனித’ப்படுத்துவது பார்ப்பனியம். மதவாதம் – மதவெறியாக ஜாதியம் – ஜாதி வெறியாக மிக எளிதாக ‘உருமாற்றம்’ பெற்றுவிடுகிறது.

பெரியார் இயக்கம் நடத்திய மண்ணில் – ஜாதி மதவெறி சீர்குலைவு சக்திகள் தலைதூக்குகிறதே என்று உண்மையில் வேதனைப்படுவோர் உண்டு. பெரியார் இயக்கம் தோல்வி அடைந்து விட்டது என்று முத்திரை குத்தத் துடிப்போரும் உண்டு. ஆனால், பெரியாரைப் பேசும் அரசியல் கட்சிகளானாலும் பெரியாரை குறை கூறத் துடிக்கும் இயக்கங்கள் ஆனாலும் தமிழ்நாட்டில் தலைதூக்கிட முயற்சிக்கும் ஜாதிய மதவாத சக்திகளுக்கு எதிராக ஏன், ஒரு துரும்பைக்கூட கிள்ளிப்போட முன் வரவில்லையே என்று வேதனையுடன் கேட்கிறோம்.

தமிழகத்தின் தென்மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த 10 மாதங்களில் மட்டும் 100 கொலைகள் நடந்துள்ளன. இதில் 25 படுகொலைகள் ஜாதி வெறியால் நடந்தவை. “இந்தப் பகுதிகளில் ஆழமாகப் புரையோடியுள்ள ஜாதிய உணர்வுகளால் 25 படுகொலைகள் வரை நடந்திருக்கின்றன என்ற உண்மையை மறுக்க முடியாது” என்று ‘இந்து’ ஆங்கில நாளேடு ஒரு ஆய்வுக் கட்டுரையில் சுட்டிக் காட்டியிருக்கிறது (மார்ச் 16, 2015).

தமிழகத்தின் 28 மாவட்டங்களில் ‘எவிடென்சு’ அமைப்பு நடத்திய ஆய்வு 76 தலித் மக்கள் ஜாதி வெறியர்களால் கும்பலாகவோ அல்லது குழுக்களாகவோ கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கிறது.

இந்தப் போக்குகளை ஓரளவு தடுத்து நிறுத்துவதற்கு எந்த ஒரு மாவட்டத்திலும் அந்த மாவட்டத்தின் ஆதிக்க ஜாதி பிரிவுகளைச் சார்ந்தவர்களை அதே மாவட்டத்தில் காவல்துறை அதிகாரிகளாக நியமிக்கக் கூடாது என்ற கருத்தை திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. காரணம், காவல்துறை அதிகாரிகளே சொந்த ஜாதி உணர்வோடு குற்றவாளிகளைக் காப்பாற்றவே விரும்புகிறார்கள். ஜாதி வெறி கொலைக் குற்றங்கள் அதிகரிப்பதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்தி வரும் இந்த கருத்து, இப்போது பல்வேறு முகாம்களிலிருந்தும் எதிரொலிப்பதைப் பார்க்கிறோம். ‘எவிடென்சு’ ஆய்வு நிறுவனம் இதே கருத்தை வலியுறுத்துகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி உறுப்பினருமான தென் மாவட்டத்தைச் சார்ந்த தோழர் ஆர். கிருஷ்ணன், ‘இந்து’ ஏட்டுக்கு அளித்த பேட்டியில் இதே கருத்தை வலியுறுத்துகிறார். (R. Krishnan cautions against appointing police officers from “dominant castes” in the two districts-’Hindu’ March 16.)

தமிழக காவல்துறை இயக்குனர் அசோக் குமார், தென் மாவட்ட காவல்துறை அதிகாரிகளை நேரில் சந்தித்து, இந்தப் படுகொலைகள் காவல்துறையின் செயல்பாடுகளில் மிக மோசமான களங்கத்தை ஏற்படுத்தி விட்டதாகக் கூறியிருக்கிறார். அத்துடன், அதிகாரிகள் பாகுபாடு காட்டாது, குற்றங்களை முழுமையாக விசாரணைக்கு உட்படுத்தி நேர்மையாக செயல்படவேண்டும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறார். அதிகாரிகள் பாகுபாடு காட்டாமல் செயல்பட வேண்டும் என்று இயக்குநர் கூறுவதன் அர்த்தம் என்ன? பாகுபாடு காட்டுகிறார்கள் என்ற உண்மையே அதில் மறைந்து நிற்கிறது. அந்த பாகுபாட்டுக்குக் காரணம் நாம் சுட்டிக்காட்டுவதுபோல், மாவட்ட அதிகாரிகளின் ஜாதிய உணர்வுதான். எனவே, ‘ஆதிக்க ஜாதி’ அதிகாரிகளை அந்தந்த மாவட்டங்களில் நியமிக்காமல் இருப்ப தற்கான நடைமுறைகளை உருவாக்கி செயல்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வீராச்சிக் குப்பம் ஒன்றியத்தில் கோயில் திருவிழாவுக்கு வேடிக்கைப் பார்க்கச் சென்ற அரவிந்தன் என்ற தலித் இளைஞரையும் அவரது உறவினரையும் ஜாதி வெறியர்கள் கட்டி வைத்து அடித்து தண்ணீர் கேட்டதற்கு வாயில் ‘சிறுநீரை’ கழித்திருக்கும் கேவலம் அரங்கேறியிருக்கிறது. தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்தைச் சார்ந்த பி. இராமசாமி என்ற அதிகாரி, கிராமத்துக்கே நேரடியாகச் சென்று தனியறையில் விசாரணை நடத்தி, உரிய இழப்பீடு வழங்கவும், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழக்கு தொடரவும் காவல்துறைக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.

சேலம் மாவட்டம் திருமலைகிரி கோயில் குடமுழுக்கு விழாவில் தலித் மக்கள் பங்கேற்கக் கூடாது என்று ஆதிக்க ஜாதியினர் தடை போகிறார்கள். இதை நியாயப்படுத்துகிறார் பா.ம.க. நிறுவனர் மருத்துவர் இராமதாசு.

ஜாதி குறித்தோ, ஜாதிக் கொலைகள் குறித்தோ தமிழகத்தில் கட்சிகளோ, இயக்கங்களோ, ஊடகங்களோ வாய் திறக்காத நிலையில், திராவிடர் விடுதலைக் கழகம் ஜாதிய எதிர்ப்புப் பரப்புரைப் பயணங்களை தொடர்ந்து நடத்தி வருகிறது.

கழகச் செயல் வீரர்கள் மக்களை ஊர்ஊராகச் சென்று சந்தித்து, ஜாதி எதிர்ப்பு கருத்துகளைப் பரப்பி வருகிறார்கள். தமிழர்களின் சமூக – பொருளாதார நெருக்கடிகளையும் எடுத்துக் கூறுகிறார்கள்.

தமிழகம் ஜாதி வெறிக் களமாகிடக் கூடாது என்ற கவலை கொண்ட ஆட்சிகளும் இயக்கங்களும் ஏன், காவல்துறையினரும்கூட இந்த இயக்கத்துக்கு ஆதரவு வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். பயணம் மேற்கொண்டுள்ள கழகத் தோழர்களை பாராட்டி, மகிழ்கிறோம்!

# வழக்கறிஞர்கள் சமூக நீதி போராட்டத்தை ஒடுக்க பார்ப்பனர்கள் திரைமறைவு சதி!

உயர்நீதிமன்றத்தில் ஏற்கெனவே 7 பார்ப்பனர் நீதிபதிகளாக தங்கள் விகிதாச்சாரத்துக்கு அதிகமாக உள்ள நிலையில் தலைமை நீதிபதியாக வந்துள்ள காஷ்மீர் பார்ப்பனர் - மேலும் பார்ப்பனர், முதலியார், கவுண்டர் பிரிவைச் சார்ந்தவர்களுக்கே கூடுதல் பிரதிநிதித்துவம் வழங்கி, முதல் பட்டியலை அனுப்பியுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இந்த நிலையில் சமூகநீதிக்குப் போராடும் வழக்கறிஞர்கள் மற்றும் சமூக நீதி அமைப்புகளின் கோரிக்கைகளை திசை திருப்பிட பார்ப்பன ஆதிக்க சக்திகள் தீவிரம் காட்டி வருகின்றன. முற்றுகைப் போராட்டம் நடக்கவிருந்த 16ஆம் தேதி அன்று ‘தமிழ் இந்து’, ‘ஆங்கில இந்து’ நாளேடுகளில் போராட்டத்துக்கு எதிரான கட்டுரைகளை முன்னாள் நீதிபதி சந்துரு எழுதியிருந்தார். வழமைக்கு மாறாக ஆங்கிலம், தமிழ் என்ற தனது இரண்டு இதழ்களிலும் ஒருவரே எழுதிய கட்டுரையை ஒரே நாளில் வெளியிட்டு சமூக நீதிப் போராட்டத்துக்கு ‘இந்து’ தனது எதிர்ப்பைக் காட்டியது. நீதிபதிகள் தேர்வு பட்டியலுக்கு எதிராக தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சங்கம் உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு, நீதிபதி இராமசுப்பிரமணியம் முன் விசாரணைக்கு வந்தது. கூடுதலாக பார்ப்பனர்களை நியமிக்கக் கூடாது என்ற வழக்கை பார்ப்பன நீதிபதி ஒருவரே விசாரிக்கக் கூடாது என்றும், அதுவும், நீதிபதிகள் தேர்வுப் பட்டியல் தயாரிப்புக் குழுவில் இடம் பெற்று ஒப்புதல் வழங்கிய நீதிபதியாக இராமசுப்ரமணியம் இருக்கிறார் என்றும் வழக்கறிஞர் சங்க சார்பில் வாதாடிய வழக்கறிஞர், எதிர்ப்பு மனு தாக்கல் செய்திருந்தார். எதிர்ப்பு வந்தால் விசாரணையிலிருந்து விலகிக் கொள்ளும் மரபுகளுக்கு மாறாக நீதிபதி இராமசுப்ரமணியன், இந்த வழக்கைத் தானே விசாரிக்கப் போவதாக அறிவித்து, விசாரணையின்போது கடுமையான கருத்துகளையும் முன் வைத்தார். வழக்கறிஞர்கள் போராட்டத்துக்கு எதிராக ‘தந்தி’ தொலைக்காட்சி நடத்திய ‘ஆயுத எழுத்து’ விவாத நிகழ்ச்சியை நீதிமன்றத்திலேயே நீதிபதி பாராட்டினார்.

இது தொடர்பாக, ‘தமிழ்நாடு பார் கவுன்சில்’ வளாகத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றையும் சுட்டிக்காட்ட வேண்டும். சென்னை உயர்நீதிமன்றத்தில் அகில இந்திய டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் வழக்கறிஞர் சங்கம் என்று ஒரு அமைப்பு இருக்கிறது. இந்த அமைப்புக்கான மக்கள் இலவச சட்ட ஆலோசனை மய்ய தொடக்க விழா, மார்ச் 9 ஆம் தேதி பார் கவுன்சில் வளாகத்தில் நடந்தது. சிறப்பு விருந்தினர் நீதிபதி இராமசுப்பிரமணியன், வரவேற்புரையாற்றிய அம்பேத்கர் வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த கலைச்செல்வன், நீதிபதி இராமசுப்பிரமணியத்தை புகழ்ந்து தள்ளினார்.

“மாண்புமிகு நீதிபதி இராமசுப்பிரமணியன் மிகவும் நல்லவர்; வல்லவர்; அவரது பெயரிலேயே இராமனும், சுப்பிரமணியனும் இடம் பெற்றுள்ளனர். அவதாரப் புருஷரான இராமன் சிறந்த நீதிமான். சுப்பிரமணியன் தமிழர்களின் கடவுள் இருவர் பெயரையும் தனது பெயரில் வைத்துள்ளார் நீதிபதி. இந்த கடவுள்கள் காட்டிய வழியில் நீதி வழங்குகிறார். தமிழ் இலக்கியத்திலும் சிறந்து விளங்கக் கூடியவர் நீதியரசர்” என்று பாராட்டினார்.

அதைத் தொடர்ந்து பெண்கள் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவரான சாந்த குமாரி பேச அழைக்கப்பட்டார். நீதிபதியை இராமனோடு ஒப்பிட்டுப் பேசியதை அவர் ஒரு பிடிபிடித்தார். “இராமனைப் போல் அநீதி செய்த ஒருவனைப் பார்க்க முடியாது. தனது மனைவி சீதை குறித்து, எவனோ ஒரு மூன்றாம் மனிதன் எழுப்பிய சந்தேகத்தை நம்பி, சீதையை தீக்குளிக்க வைத்து துன்புறுத்தலைச் செய்தவன் இராமன். இத்தகைய மோசமான “இராமனை” நீதிபதி வழிகாட்டியாகக் கொள்ளக் கூடாது. இராமன் வழியிலான நீதி, அநீதிதான்” என்று ஆவேசமாக பதிலடி தந்தார்.

இதற்கிடையே வழக்கறிஞர் சமூக நீதிப் போராட்டத்தை உடைக்க வழக்கறிஞர் பிரபாகரன் தலைமையிலான ஒரு வழக்கறிஞர் சங்கத்துக்கு, பார் கவுன்சில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. நீதிபதி இராமசுப்பிரமணியனுக்கு ஆதரவாக சங்கராச்சாரி வழிகாட்டலில் இந்த அமைப்பு செயல்படுவதாக கூறப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியில் வழக்கறிஞர் பிரபாகரனும் பங்கேற்றுப் பேசினார். அப்போது தனக்கு காஞ்சி ஜெயேந்திரன், விஜயேந்தினுடன் உள்ள தொடர்புகளை பெருமையுடன் குறிப்பிட்டார்.

“அண்மையில் காஞ்சிபுரம் சங்கரமடத்தில் ஜன கல்யாண் அமைப்பின் சார்பில் இலவச சட்ட சேவை மய்யம் தொடங்கப்பட்டது. அப்போது ஜெயேந்திரர், விஜயேந்திரர் இருவரும் - அரசியலமைப்பு சட்டத்தின் நோக்கம் உரியவர்களிடம் சென்று அடைய வழக்கறிஞர்களாகிய நீங்கள் பாடுபட வேண்டும்” என்று கேட்டுக் கொண்டதாக பதிவு செய்தார். போட்டி பிராபாகரன் சங்கத்துக்கு பார் கவுன்சில் தந்துள்ள அங்கீகாரமும், இவர் தனக்கும் காஞ்சி மடத்துக்கும் உள்ள நெருக்கத்தை பெருமையாக குறிப்பிட்டதும், நீதிபதிகள் நியமனத்தில் காஞ்சி சங்கர மடத் தலையீடு இருக்குமோ என்று கூட்டத்தில் பங்கேற்ற வழக்கறிஞர்கள் பேசிக் கொண்டனர்.

# ‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்!’–ஏன்?

*இதைத்தான் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தமிழர் சமுதாய இளைஞர்களிடம் எடுத்துக் கூற உரிமையுடன் வந்திருக்கிறோம்.*

பரம்பரை பரம்பரையாக நமது பாட்டன், பாட்டி காலங்களிலிருந்து நமக்கு ஜாதியைத்தான் சொல்லி சொல்லி வளர்த்தார்கள். ஜாதிப் பெருமையெல்லாம் பேசினோம்; என்ன பயன் கண்டோம்?

இப்போதும் - தமிழர்கள் ஒன்று திரள விடாமல் நம்மைத் தடுப்பது எது? ஜாதிதான்! சொந்த ஜாதிகளுக்குள்ளேயே பங்காளிகளுக்குள் சண்டை; சொத்து சண்டை; ஊருக்குள் ஜாதிச் சண்டை; தாழ்த்தப்பட்டோர் மீது பிற்படுத்தப்பட்டவர்கள் நடத்தும் ஜாதிய ஒடுக்குமுறை; “கைகட்டி நின்ற பயல் நிமிர்ந்து போகிறானே, என்ன திமிர்?” என்ற ஜாதி ஆதிக்க சிந்தனை, சக மனிதர்களை மனிதர்களாகவே பார்க்க மறுக்க வைக்கிறது ஜாதி.

கீழ் ஜாதி, படிக்கக் கூடாத ஜாதி, கூலிக்கார ஜாதி, எடுபிடி ஜாதி, அப்பன் தொழிலைச் செய்ய வேண்டிய ஜாதிகளாகக் கிடந்ததுதானே. நமது சமுதாயம். நமது சகோதரிகள் - வீட்டில் அடிமைகளாக்கப்பட்டு, பெண்கள் என்றால் வீட்டுக்கான வேலையாள் என்று தானே வளர்த்தோம்; இவையெல்லாம் எப்படி மாறியது?

இந்த அடிமைப்பட்ட சமுதாயத்துக்கு - மானம் கிடைக்க, அறிவு பெற, பெரியார் என்ற தலைவர் நமக்காகப் போராடினார். வடநாட்டில், அம்பேத்கர் என்ற தலைவர் போராடினார். பெரியார் வாழ்நாள் முழுதும் 95 வயதிலும் மரணத்தைத் தழுவும் வரை ஒவ்வொரு நாளும் ஊர் ஊராகச் சுற்றி நமது சமுதாயத்தைத் தட்டியெழுப்பினார். “ஜாதியை விட்டொழியுங்கள்; தாழ்த்தப்பட்டோர் உரிமைகளை மதித்து செயல்படுங்கள்; பெண்களை சமமாக நடத்துங்கள்; அவர்களை கட்டாயம் படிக்கச் செய்யுங்கள்; மூடநம்பிக்கைகளை விட்டொழியுங்கள்; பார்ப்பனர்களுக்கு அடிமைகளாக இருக்காதீர்கள்; தமிழர்களாய் சுயமரியாதையுடன் வாழுங்கள்” என்று காலம் முழுதும் பேசினார்; போராடினார்; சிறைச் சென்றார்; அடக்குமுறைகளை சந்தித்தார்.

நாங்கள் பெரியாரைப் பார்த்திராத இளைஞர்கள். ஆனால், இப்போது பெரியார் இல்லாத தமிழ்நாட்டில் ஜாதி மோதல், மதக்கலவரம், ஜாதிக் கட்சிகள் வளர்ச்சி, பொது ஒழுக்கக் கேடுகள், சுற்றுச் சூழலைச் கெடுக்கும் திட்டங்கள், கனிம வளங்கள் கொள்ளை, படித்தவர்களுக்கு வேலை கிடைக்காத அவலம் - என்று பிரச்சினைகள் நாளுக்கு நாள் கடுமையாகிக் கொண்டே வருவதைப் பார்க்கிறோம்.

இளைஞர்கள் மீது பெரியார் நம்பிக்கை வைத்திருந்தார். எதிர்கால இளைஞர்கள் உறுதியாக போராட வருவார்கள் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

“இது பிரச்சாரக் காலம். எந்தக் காரியமும் பிரச்சாரம் மூலம் நடைபெறுவதுதான் சாத்தியமாயிருக்கிறது. எனவே பிரச்சாரம் செய்ய ஏராளமான வாலிபர்கள் முன்வரவேண்டும்” என்று அழைத்தார். அந்த அழைப்பைத்தான் நாங்கள் செயல் வடிவமாக்குகிறோம்!

நம்மை சுற்றி நிற்கும் நெருக்கடிகளை நினைத்துப் பாருங்கள்!

தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் இல்லை. எந்த ஆட்சிக்கும் அதுபற்றி கவலையும் இல்லை. தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்கள் எண்ணிக்கை 75 இலட்சத்திலிருந்து 89 இலட்சமாக உயர்ந்துவிட்டது. வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் நமது மக்களின் எண்ணிக்கை 1 கோடியே 97 இலட்சம் பேர். அரசு வேலை வாய்ப்புகள் அருகிப் போய் விட்டன; பொதுத் துறை நிறுவனங்கள் மூடப்படுகின்றன; பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்கள் படை எடுக்கின்றன; அங்கே நமக்கு வேலை வாய்ப்பு உரிமைகள் ஏதும் உறுதி செய்யப்படவில்லை. ‘நோக்கியா’ நிறுவனம் தனது உற்பத்தியை நிறுத்திக் கொண்டு, பல்லாயிரம் தொழிலாளர்களை வீதிக்குக் கொண்டு வந்துவிட்டது. ‘டி.சி.எஸ்.’ கணினி நிறுவனம் 25,000 பொறியாளர்களை வீட்டுக்கு அனுப்புகிறது. ஆனால், கார்ப்பரேட் நிறுவனங்கள், அரசு சலுகைகளையும் மான்யங்களையும் தாராளமாகப் பெற்றுக் கொள்கின்றன. விவசாயிகளின் நிலத்தை அரசு கைப்பற்றி கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு தாரை வார்க்கலாம் என்று மோடி அரசு சட்டம் கொண்டுவந்து விட்டது. கல்லூரி மாணவன், வங்கிகளில் படிப்புக்குக் கடன் கேட்டால் நிபந்தனை மேல் நிபந்தனை போட்டு வாட்டி வதைக்கும் வங்கி நிர்வாகம், கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு கடனை வாரி வழங்கி, பிறகு ‘வாராக் கடன்’ என்று தள்ளுபடி செய்கிறது. இப்படி அரசு பொதுத் துறை வங்கிகள் தள்ளுபடி செய்த தொகை இதுவரை 3 இலட்சம் கோடி ரூபாய்! வங்கிகளிலும் கார்ப்பரேட் நிறுவனங்களிலும் உயர் அதிகாரப் பதவிகளில் இருப்பவர்கள் பார்ப்பனர்-பனியாக்கள்தான்.

தஞ்சை விவசாயத்தையே அழித்து பாலைவனமாக்கும் ஆபத்துதான் ‘மீத்தேன்’ எடுக்கும் திட்டம். காவிரி நீர் பிரச்சினையில் நடுவர் மன்றம், உச்சநீதிமன்றம், தமிழ் நாட்டின் நியாயங்களை எடுத்துக் கூறினாலும், காவிரியின் குறுக்கே கருநாடகம் (மேகேதாட்டு, இராசி மணல்) அணை கட்டி, தமிழகத்துக்கு வரும் தண்ணீரைத் தடுக்கப் பார்க்கிறது. உலகம் முழுதும் கைவிடப்படும் அணுமின் திட்டத்தை இந்தியாவில் கேரளா, மகாராஷ்டிரம் உள்ளிட்ட மாநிலங்கள் ஏற்க மறுக்கின்றன. ஆனால், கடல்வாழ் உயிரினங்களை அழித்து, மீனவர் வாழ்வாதாரத்தை அழிக்கக்கூடிய இந்த அணுமின் திட்டங்களை கூடங்குளத்தில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று வரிசை வரிசையாக ஏமாந்த தமிழர்களின் தலைமீது மத்திய அரசு திணிக்கிறது.

திட்டத்தை நியாயப்படுத்துகிறவர்கள் அனைவரும் பார்ப்பனர்கள், பார்ப்பன அதிகாரிகள். திட்டத்தின் ஆபத்தை உணர்ந்து எதிர்த்துப் போராடுவோர் - பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப் பட்டவர்கள். மற்றொரு பக்கம், நமது கனிம வளங்கள் கொள்ளை போய்க் கொண்டிருக்கின்றன. பன்னாட்டு மருந்து நிறுவனங்கள், மருத்துவ சோதனைகளுக்கு நமது மக்களின் உயிரைப் பகடைக்காய்களாக பயன்படுத்துகின்றன. அய்ரோப்பிய நாடுகளில் தடை செய்யப்பட்ட மருந்துகளை இந்திய சந்தையில் விற்பதும் தாராளமாக நடந்து கொண்டிருக்கிறது. ஏழ்மையிலும், அறியாமையிலும் தவிக்கும் நமது மக்களின் உடல்தான் பன்னாட்டுக் கம்பெனிகளின் மருந்துகளை சோதித்துப் பார்க்கக் களமாகப் பயன்படுத்தப்படுகிறது.

நாட்டின் மிக உயர்தர மருத்துவமனை என்று கூறப்படும் புதுடில்லியிலுள்ள ‘எய்ம்ஸ்’ மருத்துவ விஞ்ஞானக் கழகம், பார்ப்பன ஆதிக்கத்தில் இயங்கும் நிறுவனம். சமூக நீதியான இடஒதுக்கீட்டை மறுக்கும் நிறுவனம். இந்த நிறுவனத்தில் மருந்துகளின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 49 குழந்தைகள் அநியாயமாக உயிரிழந்துள்ளனர் என்ற அதிர்ச்சியான தகவல் அம்பலமாகி இருக்கிறது. இப்படி சோதனைக்கு உள்ளாக்கப்பட்ட 4142 குழந்தைகளில் 2728 குழந்தைகள் ஒரு வயதுக்கு உட்பட்டவர்கள். என்னே கொடுமை! இது மட்டுமா? நமது தமிழர்களின் சில்லறை வணிகத்தை ஏப்பமிட கார்ப்பரேட் நிறுவனங்கள் படையெடுத்து வந்து கொண்டிருக்கின்றன.

அரசுப் பள்ளிக் கூடங்கள், அரசு கல்லூரிகள் மூடப்படுகின்றன. கல்வி வணிகக் கொள்ளையாகி விட்டது. இப்படி ஆபத்துக்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்! சமூக நீதியை, வாழ்வுரிமையை, கல்வியை, வேலை வாய்ப்புகளை பறிக்கொடுத்துக் கொண்டு சுற்றுச் சூழல் ஆபத்துகளையும் விவசாய நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வரும் ஒரு சூழலில் நாம் மூச்சுத் திணறி நிற்கிறோம்.

இந்த ஆபத்துகளை எதிர்கொண்டு போராட வேண்டிய நம் இனம், ஜாதிப் பெருமைகளில் முகம் புதைப்பதும், ஜாதிக் கலவரங்களுக்கு ஆயுதம் எடுப்பதும், ஒடுக்கப்பட்ட மக்களை அடிமைகளாக்குவதில் பெருமை கொள்வதும் தமிழனுக்கு பெருமையா? இது தேவையா? இந்த கேள்வியை உங்கள் சிந்தனைக்கு கொண்டு வரவே இந்தப் பயணம்.

ஒரே ஜாதியில் நெருங்கிய உறவுக்குள் நடக்கும் திருமணங்களில் பிறக்கும் குழந்தைகள் உடல் ஊனமாகவும், மன வளர்ச்சியற்றவர்களாகவும் பிறப்பதை விஞ்ஞானிகள், மருத்துவர்கள் உறுதிப்படுத்தி வருகிறார்கள். இவ்வளவுக்குப் பிறகும் ஒரே ஜாதி முறைக்குள் திருமணம் செய்வதை நாம் நிறுத்தக் கூடாதா? சந்ததிகளை ஆரோக்கியமாக வளரவிடக் கூடாதா?

ஜாதி கடந்து ஒருவரை ஒருவர் விரும்பும் காதலர்களை ஏன் தடுக்க வேண்டும்? வாழ அனுமதிக்கக் கூடாதா? ஜாதியைக் கடந்து காதலித்ததற்காக பெற்றோர்களே சொந்த மகளைக் கொலை செய்து, “ஜாதிப் பெருமையைக்” காப்பாற்றிய 42 “கவுரவ (ஆணவ)க் கொலைகள்” கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் தமிழர்களில் நடந்துள்ளன. நாம் எங்கே போகிறோம்? குடும்பத்தில் பாசத்தை ஊட்டி வளர்த்த அன்புச் செல்வங்களையே பிணமாக்கி மகிழ்வதுதான் ஜாதிப் பெருமை என்றால், இந்த ஜாதியும், ஜாதிப் பெருமையும் தேவைதானா?

சிந்தியுங்கள், தமிழர்களே! ஆகவேதான் நாம் ஒன்றுபட்டு குரல் கொடுப்போம்!

எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்! எங்களுக்கு சுயமரியாதை வாழ்வுரிமை வேண்டும்! ஜாதியைக் கடந்த தோழமை வேண்டும்! ஜாதி கடந்து திருமணங்கள் பெருக வேண்டும்! எங்கள் நாட்டின் உரிமைகள் சுரண்டப்படாமல் தடுக்கப்பட வேண்டும்!

ஜாதிய - பார்ப்பனிய - மதவெறி சக்திகளே! புதுயுகம் காண புறப்பட்டு விட்டோம்! புதிய தலைமுறைக்கு வழி விடுங்கள்!

- இது, ஒரு விழிப்புணர்வுப் பயணம்.
- தமிழின இளைஞர்களை ஒன்று சேர்க்கும் பயணம்.
- எந்த ஒரு அரசியல் கட்சியையும் சார்ந்து நிற்காத பயணம்.

தோழமையுடன் இணைய அழைக்கிறோம்!

**- திராவிடர் விடுதலைக் கழகம்**

*(பரப்புரைப் பயணங்களில் வழங்கப்படும் துண்டறிக்கை)*


**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’**
**பத்திரிகையின் உரிமை விளக்க அறிவிக்கை**
படிவம் 4 (8வது விதி காண்க)

| | | |
|---|---|---|
| 1. | வெளியாகும் இடம் | : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை–41. |
| 2. | வெளியாகும் காலம் | : வாரம் ஒரு முறை |
| 3. | அச்சடிப்பவர் பெயர் | : எஸ். தீமாஸ் |
| | இனம் | : தமிழர் |
| | முகவரி | லில்லி சூசை ஆப்செட் 8 முகமது உசேன் சந்து, சென்னை–14. |
| 4. | பதிப்பாளர் பெயர் | : க. இராசேந்திரன் |
| | இனம் | : தமிழர் |
| | முகவரி | : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை–41. |
| 5. | ஆசிரியர் பெயர் | : க. இராசேந்திரன் |
| | இனம் | : தமிழர் |
| | முகவரி | : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை–41. |
| 6. | ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்யப்பட்டுள்ள பத்திரிகை உரிமையாளரும் கூட்டாளிகளும் பெயரும் முகவரியும் | : இல்லை |

நான் இதன் மூலம் மேலே காணப்படும் விவரங்கள் யாவும் எனக்குத் தெரிந்த வரை முற்றிலும் உண்மையென நம்பகமாக அறிவிக்கிறேன்.

(ஒப்பம்)
நாள்: 26–03–2015 க. இராசேந்திரன்
இடம்: சென்னை. வெளியிடுபவர் கையொப்பம்

DATE OF PUBLICATION 26.03.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# பரப்புரை இயக்கத்துக்கு வணிகர்கள்–பொதுமக்கள் ஆதரவு

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன. இதன்படி 21ஆம் தேதி பெருமாள் மலை, கொஞ்சம் பாளையம், மரவபாளையம் பகுதிகளிலும், 22ஆம் தேதி இராவுதார் குளம், காமராஜ் நகர், கால்நடை மருத்துவமனை பகுதியிலும், 23ஆம் தேதி மரப்பாலம், சத்யா நகர், அரங்கம்பாளையம் பகுதிகளிலும்; 24ஆம் தேதி கனகபுரம், சூரம்பட்டி வலசு, சித்தோடு 4 ரோடு ஆகிய பகுதிகளிலும் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. காவை இளவரசன், அனைத்துக் கூட்டங்களிலும் பங்கேற்று, ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சிகளை நடத்துகிறார். கா.சு.வேலுச்சாமி உரையாற்றுகிறார்.

**தாரமங்கலத்தில்...**

சேலம் மாவட்டக் கழகம் சார்பாக பரப்புரைப் பயணத்தின் தொடக்க விழா பொதுக் கூட்டம், மார்ச் 21ஆம் தேதி தாரமங்கலத்தில் அண்ணா சிலை அருகில் சிறப்புடன் நடந்தது. மாவட்டச் செயலாளர் சூரியக்குமார் தலைமை தாங்கினார். மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினர், ஜாதி எதிர்ப்புப் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடினர். தொடர்ந்து திராவிடர் கலைக் குழுவினர் வீதி நாடகங்களை நடத்தினர். அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் மக்களிடம் பேராதரவு வெளிப்பட்டது. நிறைவாக, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பயணத்தின் நோக்கங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். கழகத்தின் புதிய வெளியீடுகள் அறிமுகம் செய்யப்பட்டன.

முதல் கட்ட பரப்புரை 10 நாள்களுக்கு திட்டமிடப்பட்டு, நாள் ஒன்றுக்கு மூன்று கூட்டங்கள் வீதம் நங்கவள்ளி, மேட்டூர், ஆர்.எஸ். மேட்டூர் அணை, கொளத்தூர், ஓமலூர், இளம்பிள்ளை, ஏற்காடு, சேலம் நகரம், ஆத்தூர் பகுதிகளில் பரப்புரைக் கூட்டங்கள் நடக்கவிருக்கின்றன.

**மயிலாடுதுறையில்...**

மயிலாடுதுறையில் பரப்புரைப் பயணம் மார்ச் 21ஆம் தேதி மாலை 5 மணியளவில் சிறையில் வீரமரணமடைந்த ஜாதி ஒழிப்புப் போராளி வெள்ளைச்சாமி பிறந்த மணல் மேடு கிராமத்திலிருந்து தொடங்கியது. தொடக்க விழா நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் அன்பு, நகர செயலாளர் தமிழ்வேலன்,




கடலங்குடி ஊராட்சித் தலைவர் மோகன் குமார் (வி.சி.) ஆகியோரைத் தொடர்ந்து முனைவர் ஜீவானந்தம் சிறப்புரையாற்றினார். இரண்டாவது கூட்டம் கடலங்குடியில் நடந்தது.

22ஆம் தேதி மாலை 4 மணிக்கு இரண்டாம் நாள் பரப்புரை, கொள்ளிடம், சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயிலில் நடந்தது. 23ஆம் தேதி மாலை 4 மணிக்கு திருக்கடையூரில் தொடங்கி, ஆக்கூர், செம்பனார் கோயிலில் நடந்தது. 24ஆம் தேதி பேரளம், கொல்லுமாங்குடி, மங்கைநல்லூர், எலந்தங்குடியில் நடைபெறுகிறது. 25ஆம் தேதி குத்தாலம், மயிலாடுதுறை, கிட்டப்பா, அங்கடி, இரயிலடியில் நடைபெறுகிறது. 26ஆம் தேதி மயிலாடுதுறை சின்னக்கடை வீதியில் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. மதிமாறன், கழகத் தலைவர் கொளத்தூர்மணி சிறப்புரையாற்றுகிறார்கள். பரப்புரைக் கூட்டங்களுக்கு வணிகர்களும், பொது மக்களும் பேராதரவு தந்து வருவதாக மாவட்ட செயலாளர் மகேஷ் கூறுகிறார்.

## திருப்பூரில் மகளிர் நாள் விழா !

திருப்பூரில், தமிழ்நாடு அறிவியல் மன்றம் சார்பில் மகளிர் தின விழா 08.03.2015 அன்று திருப்பூர் கே.ஆர்.சி. சிட்டி சென்டர், மங்கலம் சாலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது. ”மாதவிடாய்” மற்றும் ”தீவரைவு” ஆவணப் படங்கள் திரையிடப் பட்டன. பின்பு நடைபெற்ற கருத்தரங்கத்தில்




”மாத விடாய் காலத்தில் உணவு” எனும் தலைப்பில் இயற்கை மருத்துவர் பெரியார் செல்வி, ”மாதவிடாய் குறித்த மூட நம்பிக்கைகள்” எனும் தலைப்பில் தமிழ்நாடு அறிவியல் மன்ற செயலாளர் ரஞ்சிதா கருத்துரை வழங்கினர். மதிய உணவாக அனைவருக்கும் பிரியாணி வழங்கப்பட்டது. மதிய உணவு இடைவேளைக்கு பின் பல்வேறு துறைகளில் சிறப்பிடம் பெற்ற பெண்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இதில் இந்திய அளவிலான கால்பந்து போட்டியில் தமிழக அணியில் இடம்பெற்று விளையாடிய மணியரசி, கபடி விளையாட்டில் மாநில அளவிலான போட்டிகளில் இடம் பெற்ற மைதிலி ஆகியோருக்கும், கலைத்துறையில் சிறந்து விளங்கும் கிருஷ்ணவேணி, சங்கீதா, கவிதா ஆகியோருக்கும், மருத்துவத்துறையில் சு.பார்வதி, கல்வித்துறையில் கோவை மாவட்ட அளவில் நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் ஜான்சி, மற்றும் ஆசிரியர்கள் ஜோதி, மாலதி, தமிழ்செல்வி, சுயதொழிலில் பரமேஸ்வரி, கவிதா, சரஸ்வதி, சரண்யா, ஓவியத்துறையில் சம்யுக்தா, இலக்கிய துறையில் கனல் மதி ஆகியோருக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியின் இடையில் திராவிடர் கலைக் குழுவினரின் விழிப்புணர்வு வீதி நாடகம் நடைபெற்றது. கிருஷ்ணவேணி, பெண் விடுதலை குறித்து கவிதை வாசித்தார். இடையே பழச்சாறும், பிஸ்கட்டுகளும் பங்கேற்றவர்களுக்கு வழங்கப்பட்டது. பின் இந் நிகழ்ச்சி குறித்து கலந்துகொண்டவர்கள் பேசுகையில், “புதியதாக தாங்கள் இது போன்ற நிகழ்ச்சியில் பங்கேற்பதாகவும், இந்நிகழ்வின் மூலம் பல்வேறு புதிய பயனுள்ள செய்திகளை அறிந்து கொண்டோம்” எனவும் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சிக் குறித்து கல்லூரி மாணவிகள் கூறுகையில், ‘தன்னம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் அளிக்கும் வகையில் இருந்ததாக’ கூறினர். தோழர் ஒருவர் கூறுகையில், “ஞாயிற்றுக்கிழமை. இந்நேரம் வழக்கமாக, தான் கோயிலில்தான் இருப்பேன் எனவும், ஆனால் இன்று இவ்விடத்தில் இருப்பது மாற்றாக இருந்தாலும் இந்த நிகழ்ச்சி அதனை விட மிகவும் உபயோகமானதாக இருந்தது” என குறிப்பிட்டார். “மீண்டும் இது போன்ற நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்துமாறும் அவற்றில் நாங்கள் கட்டாயம் வந்து கலந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் பங்கேற்கவும் செய்வோம்” என அனைவரும் ஒருங்கே உற்சாகமாக கூறியது பெரும் வரவேற்பைப் பெற்றது. அறிவியல் மன்ற தோழர்கள் மடத்துக்குளம் மோகன், பொருளாளர் தமிழ்செல்வன் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை கவனித்தனர். நிகழ்ச்சியை தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி ஒருங்கிணைத்தார். மாலை 6 மணியளவில் நிகழ்ச்சி நிறைவு பெற்றது

## வினாக்கள்... விடைகள்...!

- விவசாயிகளுக்கு நன்மை செய்யவே நிலத்தைக் கைப்பற்றும் சட்டம்.
  **– பிரதமர் மோடி**

  விவசாயம் செய்து நஷ்டம் ஏற்பட்டு தற்கொலை செய்து கொள்ள வேண்டாமே என்ற நல்ல எண்ணம் போல!

- திருப்பதி கோயிலில் மொட்டை அடிக்க பெண்கள் நியமனம்.
  **– தேவஸ்தானம் அறிவிப்பு**

  மொட்டை போட மட்டும் பெண்களுக்கு உரிமை தருவீங்க... ஆனால், லட்டு தயாரிப்புகோ ‘பிராமண ஆண்களுக்கு’ மட்டும். நன்னா, இருக்கு!

- கோவாவில் மாட்டிறைச்சிக்கு தடை போட மாட்டோம்.
  **– கோவா பா.ஜ.க. முதல்வர்**

  எதுக்கும், குடியரசுத் தலைவர் உங்க ஆட்சியைக் கலைச்சிடாம பாத்துக்குங்க!

- மோடி ஆட்சியில் 300 நாள்களில் 600 மதக் கலவரங்கள்; 49 பேர் மரணம்.
  **– செய்தி**

  600 மதக்கலவரங்கள் நடந்தும் இறப்பு விகிதத்தை 49 ஆக அரசு கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே மிகப் பெரும் சாதனைன்னு சொல்வீங்களே!

- நாகர்கோயில் காவல் நிலையத்தில் வைக்கப்பட்ட விநாயகன் சிலை இரவோடு இரவாக மறைந்தது. **– செய்தி**

  மீண்டும் காவல்துறை தேடிப் பிடித்து கொண்டு வராமல் இருந்தால் சரி.

- மத்திய அரசு அலுவலகங்களை சுத்தப்படுத்த ‘பினாயில்’ போன்ற திரவ வேதியப் பொருள்களுக்கு மாற்றாக பசு மாட்டு சிறுநீரைப் பயன்படுத்தலாம்.
  **– மேனகா காந்தி பேட்டி**

  ஆனால்! பசு மாட்டு சிறுநீரை மட்டுமே பயன்படுத்த வேண்டும்; எவராவது எருமை மாட்டு சிறுநீரைப் பயன்படுத்தினா, 5 ஆண்டு சிறை!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 26th March 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN